500 Business Cards - Only $25
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்...
1345 Morningside ave #8, Scarborough Tel:416-284-9545

இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com

Dental Clinic
Dr. Iru VIJAYANATHAN
BDS, MFDS, FAGD,
General Dental Practitioner
3150 Eglinton Ave East, Scarborough (Markham & Eglinton) 416.264.3232
3351 Markham Road # 129, Scarborough (Markham & Steeles) 416.609.2022

2 கார்த்திகை 2012, 10,000 பிரதிகள் இதழ் 9

## ஆளும் கட்சியின் அடுத்த இலக்கு

# இலங்கையின் நீதித்துறை!

அண்மைக்காலங்களில் நடைபெற்ற சில சம்பவங்கள் நீதித்துறையின் சுயாதீனம் குறித்து பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது. மன்னார் நீதிமன்றத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமும் தாக்குதலும், அமைச்சர் பாரத லஷ்மணனின் கொலை வழக்கு, அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் தொடர்பான வழக்கு, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டமை போன்ற பல சம்பவங்களே நீதித்துறையின் சுயாதீனம் குறித்த சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

தற்போது, ஆட்சியாளருக்கும் நீதித்துறைக்கும் இடையிலான முறுகல் நிலையொன்றும் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் திவிநெகும (வாழ்வின் எழுச்சி) சட்ட மூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது, உயர் நீதிமன்றம் "அச்சட்டமூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் சிலவற்றுடன் தொடர்பு பட்டுள்ளதால் மாகாண சபைகளின் அங்கீகாரம் பெற்ற பின்னரே சட்டமூலமாக்க முடியும்" எனத் தெரிவித்திருந்தது. இது ஒரு வகையில் அச்சட்டமூலத்தினை நிறைவேற்றுவதற்கு விதிக்கப்பட்ட தடையாகவே கருதப்பட்டது. இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஆளும் தரப்பினருடனான முறுகலுக்கு முதற் காரணியாக அமைந்தது. ஆளும் தரப்பு உயர்நீதிமன்றம் மூலமாக இவ்வாறு ஒரு தடை போடப்படும் எனக்கருதியிருக்கிவில்லை.

> *மொன்றியலில் இடம் பெற்ற கொலை, தற்கொலை நடவடிக்கை ஒன்றில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.*
>
> பக்கம் 2...

இந்த மனுவின் பிரதியொன்றை வழமைப்படி சபாநாயகருக்கு அனுப்பி வைக்காமல் செயலாளர் நாயகத்திற்கு உயர்நீதிமன்றம் அனுப்பி இருந்தது. இதனால் சபாநாயகர் கோபமடைந்து கண்டனங்களைத் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத்தில் சபாநாயகர் பேசுகையில், "ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அடுத்து சபாநாயகரே உள்ளார். பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு வரைய றுக்கப்பட்ட அதிகாரங்களே இருக்கின்றன என்பதனால் மனுவின் பிரதியை உயர் நீதிமன்றம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பியது மன்னிக்க முடியாத குற்றமாகும்" என கண்டனம் தெரிவித்திருந்தார்.

வெளிவிகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் "நீதிச்சேவை ஆணைக்குழு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள வரையறைகளையும் மீறிச் செயற்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டியது பாராளுமன்றத்தின் கடப்பாடாகும்." எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வருட செப்டம்பர் மாத நடுப்பகுதியில், நீதிச்சேவை ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையும் ஆளும் தரப்பினரைக் கோப

## வெட்கித் தலை கவிழ்ந்தோம்...



கறுப்பு ஒக்டோபர் - வடமாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றபட்டு 22 ஆண்டுகள்!

படம்: நன்றி http://iam.lk

பூபாளத்தில் விளம்பரம் செய்ய
Tel: 416.284.4004
e-mail: boobalam@ymail.com

JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION
JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5

Nickes Fancy
நிகேஷ் பான்ஷி
Gents & Ladies Readymade Garments, Sarees, Salwar Kameez, Children Wears, Books & Gift Items
462 Jean Talon West, Montreal, QC. H31 1R3
514.495.3765, 514-270.81.81

THE COURIER SOURCE
International
- Worldwide Express
- Worldwide Economy
- Air Fright/ Sea Freight
- Export & Import
Local & Nationwide
- Overnight Services
- Same Day Services
- Direct Drive
905.761.7979
Torontoவிலிருந்து உலகின் எப்பாகத்திற்கும்.. இலங்கை, இந்தியாவிலிருந்து Torontoவிற்கும்.
8600 Keele St, Unit #10, Concord, ON, L4K 4H8
Sales@thecouriersource.com, www.thecouriersource.com

Make Your Dream Home Come True
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating, Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation,
Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth
Repair Technicican
647.768.4143

BALACHANDRAN MUTHAIAH
Professional Corporation
Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public
Real Estate Law, (Residential/Commercial), Business Law, Family Law, Immigration Law, Estates Law, Last Will, Affidavits, Probate, Translations, etc.
2401 Eglinton Ave. E. Suite 300, Toronto, ON M1K 2M5
Ph: 416.755.5544, Fax: 416.755.5594
e-mail: balalawoffice@gmail.com

மடையச் செய்திருக்கிறது. இந்த அறிக்கை, "நீதித்துறையில் நிறைவேற்றதிகாரம் தலையீடு செய்கிறது" எனத் தெரிவித்திருந்தமையே ஆளும் தரப்பினரின் கோபத்திற்குக் காரணமாகும்.

இதையடுத்து, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கடந்த வாரம் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவின் கணவர் மீது வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது. இந்நடவடிக்கை ஆளும் தரப்பின் பழிவாங்கும் அல்லது அச்சுறுத்தும் நடவடிக்கையாகவே கருதப்பட்டது.

இந்த முறுகல் நிலையின் உச்சக்கட்டமாக இன்று, பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக "அரசியல் குற்றவியல் பிரேரணை" ஒன்றை ஆளும் தரப்பினர் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பிரேரணை இன்று சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் முதலாவது பெண் நீதியரசராக பதவியேற்ற சிராணி பண்டாரநாயக்கா நீதித்துறையின் சுயாதீனத்தினை காப்பதில் அக்கறையுடன் இருந்தவர் என்று பாராட்டப்பட்டவர்.

நீதித்துறை மீது முன்னடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை குறித்து சுயாதீன சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இத்தைகய செயல்கள் நீதித்துறையின் சுயாதீன செயற்பாட்டிற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் ஊறுவிளைவிக்கும் செயல்களெனக் கருதுகிறோம். நீதித்துறையின் சுயாதீனத்தின் அவசியத்தையும் பிரதானத்தையும் கருத்தில் கொண்டு நீதித்துறை மீதான தாக்கதல்களை நிறுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், "நெருக்கடி மிக்க இத்தருணத்தில் பொது மக்கள் நீதித்துறைக்கு உறுதுணையாக இருப்பார்களென நம்புவதுடன், சமூக உணர்ச்சியுள்ள ஒவ்வொரு குடிமகனும் ஜனநாயகத்தின் நம்பிக்கை சின்னமாக விளங்கும் நீதித்துறையை பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும்" எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இலங்கையின் நீதித் துறை எதிர்நோக்கிவரும் பிரதான நெருக்கடி, இலங்கையில் ஜானதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களிற்கு முகம் கொடுத்தலாகும். இலங்கை நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்டுள்ள நாடு என்ற வகையில் ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரங்கள் யாப்பினூடாக வழங்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வருகிறது. அண்மைக்காலங்களில் ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் படிப்படியாக அதிகரிக்கும் முயற்சிகளை ஜனாதிபதி மேற்கொண்டு வருகிறார் என்ற குற்றச்சாட்டு பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்ட 18 ஆவது யாப்புத் திருத்தமானது ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மேலும் அதிகரிப்பனவாகவே உள்ளன.

ஜானதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கு நிறைவேற்று அதிகாரங்களும் இருக்கிறது. அவர் தலைமையிலான ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதனால் யாப்புத் திருத்தங்களைக் கூட இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. எனவே நீதித்துறையின் சுயாதீனத்தினை ஆளும் கட்சி இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளை தடுத்து நிறுத்துவது கடினமானதொரு முயற்சியாகவே இருக்கும் என்றே தெரிவிக்கப்படுகிறது.

# அரசியலமைப்பின் 13ம் திருத்தத்தினை நீக்க மும்முனை நடவடிக்கைகள்.

### தாயகத்திலிருந்து விஜய்

மாகாண சபைகளின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்த அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தினைநீக்கக்கோரிமும்முனை நடவடிக்கைகள் தென்னிலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் தேசிய சுதந்திர முன்னணி கட்சியைச் சேர்ந்த அமைச்சர் விமல் வீரவன்சவும் இணைந்து இந்த மும்முனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் 13 ஆவது திருத்தத்தினை நீக்க வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து வந்த நிலையில், அக்கருத்தினை ஆதரித்து பலர் கருத்தக்களை வெளியிடவும் செய்தனர். ஆயினும் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்பக்வெல, அண்மையில் "13 ஆவது திருத்தத்தினை நீக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை" என்றே தெரிவித்திருந்தார்.

ஆயினும் தற்போது, ஆளும் கட்சியில் இணைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியும், தேசிய சுதந்திர முன்னணி கட்சியும் 13 ஆவது திருத்தத்தினை நீக்குவதற்காக தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்கட்சியின் தலைவர்கள் 13 ஆவது திருத்தத்திற்கெதிராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன், 13 ஆவது திருத்தத்திற்கெதிராக மாவட்ட ரீதியிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ள நிலையில் விரைவில் கொழும்பில் பாரிய தொடர் போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராகி வருவதாகவும் தெரவிக்கப்படுகிறது. மேலும் 13 ஆவது திருத்த சட்டத்தை இரத்துச் செய்வதற்கான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டு வர திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் இந்த சட்டத்தினை நீக்க நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஊடக செயலாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க விடுத்துள்ள செய்தியில், "இந்தியாவினால் திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே, அனைத்து மக்களும் வீதியிலிறங்கி போராட முன்வரவேண்டும். இல்லையென்றால் நம் தாய்நாடு பிரிவினைவாத சக்திகளினால் ஆக்கிரமிக்கப்பட்டு விடும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

# மொன்றியலில் பெண்ணைக் கொலை செய்து தமிழர் தற்கொலை

மொன்றியலில் இடம் பெற்ற கொலை, தற்கொலை நடவடிக்கை ஒன்றில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பதாகதகவல்கள் கூறுகின்றன. பார்க் எக்ரென்சன் பகுதியில் கடந்த திங்கள் கண்டுபிடிக்கப்பட்ட எரிந்த நிலையில் இருந்த வாகனம் ஒன்றில் இருந்து இரண்டு உடல்கள் மீட்கப்பட்டிருந்தன. ஆணும் பெண்ணும் சம்பந்தப்பட்டிருந்த இந்த சம்பவத்தில் இருவரும் யார் என்பதை பொலிசார் அறிந்த போதிலும் அதை ஊர்ஜிதப்படுத்த பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருவரும் ஒருவரை ஒருவர் தெரிந்தவர்கள் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்களின் அடையாளங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்படா விட்டாலும் இருவரும் தமிழர்கள் என்றும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு ஒன்று காரணமாகவே ஒருவரைக் கொலை செய்து விட்டு மற்றவர் வான் ஒன்றில் வைத்து தீ மூட்டித் தற்கொலை செய்ததாகவும் மொன்றியல் தமிழ் வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

வாகனத்தில் இருந்து எழுந்த புகையைக் கண்ட அயலவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பொலிசாரும் தீயணைக்கும் படையினரும் வந்து நெருப்பை அணைத்த போதே, உள்ளே உடல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பிந்திய செய்திகளின்படி ஆணின் பெயர் பிரபாகரன் நவரத்தினம் என்றும் பெண்ணின் பெயர் யோகராணி குணரத்தினம் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடம் மொன்றியலில் நடைபெற்ற 25வது கொலை இதுவாகும்.

# ஐ.நா மனிதவுரிமை ஆய்வாளரை நீக்கக் கோரும் கனடா!

பலஸ்தீனிய பிரதேசங்களிலுள்ள மனிதவுரிமைகளைப்பற்றி ஆராய்வதற்கான ஐ.நாவின் விசேட ஆய்வாளரான (UN's special rapporteur on human rights in the Palestinian territories) றிச்சாட் ஃபோல்க்கை விலத்தும்படி கனடா. அமெரிக்கா. இஸ்ரேல் ஆகிய நாடுகள் கேட்டுள்ளன. றிச்சாட் ஃபோல்க்கின் சமீபத்திய அறிக்கையே இதற்கான காரணமாகும். இஸ்ரேலிய சட்டவிரோத குடியிருப்புக்களுடன் தொடர்புள்ள சர்வதேசக்கம்பனிகளை பகிஸ்கரிக்கும்படி றிச்சாட் ஃபோல்க் அறிக்கை கேட்டுக்கொண்டது. வழக்கமான இஸ்ரேலிய எதிர்ப்பு அறிக்கைகளின் தொடர்ச்சி இதுவென கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட் றிச்சாட் ஃபோல்க்கின் அறிக்கையை கண்டித்துள்ளார்.
இஸ்ரேலைக் காப்பதும் ஐக்கிய நாடுகள் சபையைக் குறைகூறுவதும் கொன்சர்வேற்றிக் கட்சியின்கீழ் கனடிய வெளிவிவகாரக் கொள்கையின் தூண்களில் இரண்டாகும். கடந்த செப்ரெம்பர் மாதம் பிரதமர் ஹாப்பர் நியுயோர்க்கில் இருந்தபோதும் அங்கு இடம்பெற்ற ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றவில்லை. பதிலாக றபாய் ஒருவரால் தொடங்கப்பட்ட சர்வமத நிறுவனம் கொடுத்த சர்வதேச இராஜதந்திரிக்கான விருதைப்பெற ஹாப்பர் அங்கு சென்றிருந்தார். அங்கு பேசிய ஹாப்பர் ஐ.நாவைக் குறைகூறினார். அதேவேளை பிரதமர் ஹாப்பருக்குப் பதிலாக ஐ.நா பொதுச்சபையில் பேசிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட் ஐ.நா. சபையைக் கடுமையாகச் சாடினார். சிரியாவில் இரத்தக்களரியை நிறுத்த ஐ.நாவால் முடியவில்லை என பெயட் குறைகூறினார். கனடாவில் பட்டினியை ஒழிப்பதில் கனடா தனது கடமையைச் செய்யவில்லை என்று இவ்வருடம் உணவுக்கான உரிமை பற்றிய ஐ.நாவின் விசேட ஆய்வாளர் கனடாவைக் குறைகூறினார். இவ்வறிக்கையை அமைச்சர் யேசன் கென்னி கண்டித்தார்.
ஐ.நாவைக் குறைகூற கனடா அரசுக்கு றிச்சாட் ஃபோல்க்கின் அறிக்கை இன்னொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. இஸ்ரேலியகம்பனிகளும் அமெரிக்கா. ஐரோப்பா. மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலுள்ள கம்பனிகளும் சர்வதேச மனிதவுரிமைகளையும் மனிதாபிமானச் சட்டங்களையும் மீறுவதாக ஃபோல்க்கின் அறிக்கை கூறுகிறது. இக்கம்பனிகள்சட்டவிரோத இஸ்ரேலிய குடியிருப்புக்களை உருவாக்குவதற்கு உதவுவதுடன் அவற்றிற்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் அத்துடன் பலஸ்தீனிய மூலவளங்களை சுரண்டுவதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது. பலஸ்தீனிய பிரதேசங்களில் இஸ்ரேலிய குடியிருப்புக்கள் அதிகரித்து வருவதாகவும் இஸ்ரேல் ஐ.நா. தீர்மானங்களை அசட்டை செய்வதாகவும் கூறும் அறிக்கை இஸ்ரேலிய நடைமுறைகளை கண்டனம் செய்கிறது.
ஐ.நாவுக்கான இஸ்ரேலிய தூதுவராலயம் இந்த அறிக்கை முழுக்க முழுக்க ஒருபக்கச்சார்பானதெனக்கூறி றிச்சாட் ஃபோல்க்கை மாற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. கனடா ஃபோல்க் தனது அறிக்கையில் கூறப்பட்டவற்றை மீளப்பெறவேண்டும் அல்லது பதவி விலகவேண்டும் என்று கோரியுள்ளது. ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சூசன் றைஸ் அறிக்கையைப் பொறுப்பற்றதெனவும் ஏற்றுக்கொள்ளமுடியாததெனவும் கூறியுள்ளார். இஸ்ரேலிய-பலஸ்தீனிய பிரச்சினையை சமாதான முறையில் தீர்ப்பதற்கு இவ்வறிக்கை உதவவில்லையெனவும் சமாதானத்திற்கான சூழலைக் கெடுப்பதாகவும் அறிக்கையொன்றில் சூசன் றைஸ் கூறுகிறார். ஃபோல்க்

16ம் பக்கம்...

# கனவுலகிலிருந்து நிஜ உலகுக்கு வருவோம்

‘நம்பிக்கை தான் வாழ்க்கை’ என்ற தத்துவத்தின் அடிப்படை positive thinking என்பது. நல்லது நடக்கும் என்று நம்பினால், நல்லதே நடக்கும் என்பதாக!

மனம் நல்லது நடக்கும் என்று நம்புவது நல்லது தான். ஆனால் உண்மையை மனம் நம்ப மறுக்கும்போது, அது ஆபத்தில் தான் போய் முடியும்.

மனித மனம் விசித்திரமானது. அது எதைக் கேட்க விரும்புகிறதோ, அதைச் சொல்பவர்களையே நம்புகிறது. உண்மையைச் சொல்பவர்களை சந்தேகத்துடன் பார்த்து, உண்மைகளை நம்ப மறுக்கிறது.

எங்கள் பாரம்பரியம் அவ்வாறானது தான். நாங்கள் நம்ப விரும்புபவற்றை எங்களுக்குச் சொல்லி எங்களைக் குஷிப்படுத்துபவர்களைத் தான் நாங்கள் நம்புகிறோம். இதற்கு ஆதாரம் தேவை என்றால், இங்கே கடைகளின் நிலக்கீழ் அறைகளில் இருந்து ஜோதிடம் சொல்லும் முக்காலம் உணர்ந்த இந்தியச் சோதிடர்களைப் பார்த்தால் தெரியும்.

எங்களுக்குக் கஷ்ட காலம், சாந்தி செய்தால் நல்ல காலம் பிறக்கும்.

இதைத் தானே நாங்கள் கேட்க விரும்புகிறோம். இதைச் சொல்பவர்களைத் தானே எங்களுக்குப் பிடிக்கும். இவர்களுக்குத் தானே ஆயிரக்கணக்கில் கொடுக்கப் போகிறோம்.

சோதிடம் வெறும் பொய்யும் புரட்டும் என்று சொல்பவர்களுக்கா நாங்கள் பணம் கொடுக்கப் போகிறோம்?

காலாகாலம் எங்களிடம் பணத்தை வாங்கும் பயண முகவர்கள், சீட்டு முகவர்கள் எல்லோரும் நாங்கள் கேட்க விரும்புபவற்றைத் தானே எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பயண முகவர்களிடம் பணத்தைக் கொடுத்து விட்டு நாங்கள் கேட்கும் முதல் கேள்வி... எயர்போட்டுக்கு உள்ளுக்க கொண்டு போய் விடுவியளோ? என்பது தானே. அவர் அதற்கு ‘ஓம்’ என்று சொல்லும் பதிலைத் தானே நாங்கள் கேட்க விரும்புகிறோம். அதை அவர் எங்களுக்குச் சொன்னதும் எங்களுக்கு நம்பிக்கை வந்து விடுகிறது.

எந்த பயண முகவரும் இதற்கு ‘இல்லை’ என்று பதில் சொல்வாரா? அப்படிச் சொன்னால் அவரிடம் பணம் கொடுப்போமா?

எதைக் கேட்க விரும்புகிறோமோ அதைச் சொல்பவர்களைத் தான் எங்களுக்குப் பிடிக்கிறது. இதனால் ஏமாற்றுக்காரர்கள் எல்லாம் நாங்கள் கேட்க விரும்புபவற்றைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இது எங்கள் வாழ்வில் மட்டுமில்லை, எங்கள் அரசியலிலும் தான்.

எங்களுடைய அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் இந்தக் கலையில் தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். எங்களுடைய மனம் நோகாதபடிக்கு, நாங்கள் கேட்க விரும்புகின்றவற்றைச் சொல்லிக் கொண்டே இருப்பவர்களாக, உண்மைகளை மறைத்து, பொய்யை விற்பவர்களாக இருக்கிறார்கள். எங்களுக்கும் உள்ளூர உண்மை தெரியும். அவர்களுக்கும் தாங்கள் சொல்வது பொய் என்பதும் தெரியும்.

இருந்தாலும் மனித மனம்...
அது நம்ப மறுக்கும்.

அதையும் மீறி உண்மையைச் சொல்பவர்களை நாங்கள் நம்ப மறுப்பது மட்டுமன்றி, அவர்களைத் துரோகிகளாகப் பார்க்கத் தொடங்குகிறோம்.

இன்று நேற்றல்ல, ஒரு பாதி நூற்றாண்டாகத்தான் இந்தக் கூத்து நடந்து கொண்டிருக்கிறது. காலாகாலம் ஒவ்வொருவரும் வந்து நாங்கள் கேட்க விரும்புகின்றவற்றைச் சொல்லிக் கொண்டிருக்க, நாங்களும் நம்பி பின்னால் போக, கடைசியில் எல்லாமே முடிந்து போக, புதிதாக ஒவ்வொருவர் தோன்றி அதே கதையைச் சொல்ல, நாங்கள் நம்பி... என்று ஒரு சுற்றுவட்டமாய் மாறி மாறி நடந்து கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு காலத்திற்கும் வந்த அரசியல்வாதிகள் கொண்ட கொள்கைகளும் அவர்கள் எங்களுக்குச் சொன்னவையும் நாங்கள் கேட்க விரும்பியவை மட்டுமே. அவர்களின் கொள்கைகளில் உண்மைகள் இருந்திருந்தால், அந்தக் கொள்கைகள் வெற்றியடைந்திருக்கக் கூடும். எங்கள் கண் முன்னாலேயே ஒவ்வொன்றும் தோல்வி கண்டன. இருந்தும் அடுத்தவர்களை நம்பும்போது நாங்கள் கவனமாக இருந்ததில்லை. ஏனென்றால், நாங்கள் கேட்க விரும்பியவைகளைக் கேட்டு நாங்கள் குஷியாக இருந்தோம்.

அந்தக் காலங்களில் எல்லாம் எங்கள் சமூகத்தில் இந்தக் கொள்கைகளின் பொய்மையைப் பற்றிச் சுட்டிக் காட்டியவர்கள் இல்லாமல் இல்லை. இந்தக் கொள்கைகளால் ஏற்படப் போகும் அழிவை அவர்கள் முன்கூட்டியே சொன்னார்கள்.

ஆனால் அவர்கள் எங்கள் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார்களா? இல்லை. இவர்கள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டார்கள். துரோகிகள் எனப் பட்டம் சூட்டப்பட்டார்கள்.

உண்மையைக் கேட்கும் மனநிலையில் நாங்கள் இருக்கவில்லை. எங்களுக்கு எங்களுடைய குஷி தான் முக்கியம்.

இந்தக் கொள்கைகள் எல்லாம் மண் கவ்விய பின்னால், நாங்கள் எப்போதாவது அந்தத் தீர்க்கதரிசிகளுக்கு நன்றிக் கடன் செலுத்தினோமா?

இல்லை, நாங்கள் அடுத்த பொய்யர்களின் பின்னால் போய்க் கொண்டிருந்தோம்.

பாராளுமன்றத்தில் ஈழம் கிடைக்கும் என்றார்கள். கேட்கப் புல்லரித்தது.

ஆயுதப் போராட்டத்தால் ஈழம் கிடைக்கும் என்றார்கள். இனிப்பாக இருந்தது.

சமாந்தரமான அரசாங்கம் நடக்கிறது, முப்படையும் இருக்கிறது என்றார்கள். கிளுகிளுப்பாக இருந்தது.

இப்போது தலைவர் உயிரோடு இருக்கிறார் என்கிறார்கள். உண்மை தெரிந்தாலும், நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஏனென்றால், இதைத் தானே நாங்கள் நம்ப விரும்புகிறோம். அதைச் சொல்பவர்களை எங்களுக்குப் பிடிக்கிறது.

முன்பு பணம் சேர்ப்பதற்காக எங்களைக் குஷிப்படுத்தினார்கள். பின்னர் இராணுவம் மூர்க்கத்தனமாக முன்னேறிய போதும், உண்மையை நிலைமையை வெளியில் சொல்லாமல், நாங்கள் கேட்க விரும்பியவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் அந்தப் பொய்களை நம்பிக் கொண்டிருந்தோம்.

எங்களுக்கு உண்மை தெரிந்திருந்தால், சரியான நேரத்தில் எதையாவது செய்திருக்க மாட்டோமா? அழிவைத் தடுத்து நிறுத்தியிருக்க மாட்டோமா?

தலைக்கு மேலே வெள்ளம் வந்ததும் தான் நாங்கள் விழித்துக் கொண்டோம். ஆனால் அப்போது நிலைமை கட்டுமீறிப் போய் விட்டிருந்தது.

இதெல்லாம் எங்களைக் குஷிப்படுத்துவதற்காக அவர்கள் சொன்ன பொய்களால் வந்த வினை. தன் வினை தன்னைச் சுடும் என்பது போல, அதுவே அவர்களுக்கு முடிவாகி விட்டது.

சமீபத்திய அழிவின் பின்னாலும், நாங்கள் இன்னமும் பாடங்களைக் கற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கும் நாங்கள் எதைக் கேட்க விரும்புகிறோமோ, அதைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களைத் தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். இதனால், ஏமாற்றுக்காரர்கள் எது எல்லாம் எங்களைக் குஷிப்படுத்துமோ அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

25 வருடங்களாக எங்களுக்குப் பொய் சொன்னவர்கள், நாங்கள் கேட்க விரும்புகின்றவற்றைச் சொல்லி எங்களைக் குஷிப்படுத்தியவர்கள் தான், முள்ளிவாய்க்கால் அழிவிற்குப் பின்னாலும் எங்களுக்குப் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாராவது இதுவரைக்கும், தாங்கள் சொன்ன பொய்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா? தங்கள் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டிருக்கிறார்களா?

இல்லை.

திரும்பவும் புதிய பொய்களோடு வருகிறார்கள். எங்களுக்கு அவற்றைக் கேட்கப் பிடிக்கும் என்பதால். நாங்கள் அவற்றை நம்புவோம் என்பதால்.

அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் எல்லாருமே இன்றும்



ஏடு இட்டோர் இயல்

பூபாளம் வார இதழ்
Palm Springs Newspapers Ltd நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர் குழு
சுல்பிகா
தவபாலன்
ரமேஷ்
தர்சன்

கனடியச்செய்திகள்-ஸ்ரீரஞ்சினி
உலகச் செய்திகள்-மகேஸ்
இந்தியச் செய்திகள்- முகுந்தன்
கலையுலகச் செய்திகள்-சுமதி
வாழ்வு,நலம்-தனோ
விளையாட்டு-பரதன்

இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை.
ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.

வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.

**Editorial Board**
Zulfika, Ramesh, Dharsan, Thavabalan

Boobalam is published by Palm Springs Newspapers Ltd.

1345, Morningside Ave #8,
Scarborough, On, M1B 2T3
Tel: 416 284 4004
e-mail: boobalam@ymail.com
Web:www.boobalam.com

Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

எங்களைக் குஷிப்படுத்துவதற்காக, உண்மையை மறைத்து, கனவுகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மீண்டும் இன்னொரு போராட்டம் வெடிக்கும், தமிழீழம் மலரும், போர்க்குற்ற, இன அழிப்புக் குற்றச்சாட்டில் மகிந்த கழு ஏற்றப்படுவார், இந்தியாவின் முகத்தில் கரி பூசுவோம் என்றெல்லாம் எங்களுக்குக் கேட்க ஆசை தான். குஷியாகத் தான் இருக்கும். நடைமுறையில் சாத்தியமானவையா இவை? இதற்கு அங்கேயுள்ள மக்கள் தயாரா? ஏற்கனவே பட்ட அழிவு இன்னொரு முறை நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஆனால், இதைத் தான் இன்றைக்கும் இவர்கள் சொல்லி, எங்களைப் புல்லரிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் இதே தவறைச் செய்யப் போகிறோம்? எப்போது நாங்கள் உண்மைகளைக் கேட்டு நம்பப் போகிறோம்?

உண்மை பேசுபவர்களை, எங்களுக்குக் கேட்கப் பிடிக்காத உண்மைகளைச் சொல்பவர்களை, துரோகிகள் என்று சொல்வதை நாங்கள் எப்போது நிறுத்தப் போகிறோம்?

எப்போது நாங்கள் எங்கள் கனவுலகில் இருந்து வெளியே வந்து உண்மைகளுக்கு முகம் கொடுக்கப் போகிறோம்?

அங்கே வாழும் மக்களுக்கு ஒரு பொருளாதார ரீதியிலான விடிவை ஏற்படுத்த எங்களால் முடிந்ததைச் செய்யப் போகிறோமா? அல்லது கேட்க விரும்பும் விடயங்களைக் கேட்டு, பெரும் அரசியல் போராட்டம் நடத்தும் நினைப்பில், வெறும் கனவுலகில் திளைக்கப் போகிறோமா? ■

## மதுவை மறுத்ததனால் கடிவாங்கிய இளம்பெண்

21 வயதுடைய ரஷ்யாவை சேர்ந்த நடனம் ஆடும் இளம்பெண் ஒருவர் கலாச்சார நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றுவதற்காக தனது குழுவினருடன் மும்பாய் சென்றிருந்தார்.
அக்டோபர் மாதம் 28ந் திகதி குறிப்பிட்ட நடனம் ஆடுபவரும் அவரது குழுவைச்சேர்ந்த இரு ஆண் அங்கத்தவர்களும் அதிகாலை மூன்று மணியளவில் மும்பாயிலுள்ள அவர்களது ஹோட்டலை நோக்கி நடந்துகொண்டிருந்தனர். அவர்களை அணுகிய இரு வாலிபர்கள், நடந்து வந்து கொண்டிருந்த ருஷ்யர்களுக்கு தாங்கள் மதுபானம் வாங்கித்தருவதாக கூறியுள்ளார்கள்.
வாலிபர்களை அசட்டை செய்துவிட்டு முன்னேற முற்பட்டவேளை வாலிபர்களில் ஒருவன் மிகவும் பலமாக ருஷ்ய இளம்பெண்ணை கடித்துள்ளான். நடனமாடும் இளம்பெண்ணை முத்தமிட முற்பட்டவேளை இது நடந்திருக்கலாமென அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் .

## எனது மனைவி விலைமதிப்பற்றவள்

குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றங்களின்போது மனித வள அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஷஷி தரூரின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பேசுகையில் தரூரின் மனைவி சுனந்த புஷ்கர் தனது "50 கோடி ரூபா காதலி" என குறிப்பிட்டிருந்தார். அதற்கு பதிலளித்த அமைச்சர் தரூர், "எனது மனைவி நரேந்திர மோடி கற்பனை பண்ணும் 50 கோடியை விட பெறுமதியானவள். அவள் விலை மதிப்பற்றவள். இதை விளங்கிக்கொள்வதற்கு அவர் வேறு யாரையாவது காதலிக்க வேண்டும்" என கூறியுள்ளார்

# 13ம் திருத்தம்

## உடைத்துப் போட்டு ஒரு ஒப்பாரியா?

மனுதர்மன்

*ஆண்டு: 1997, மாதம்: ஆனி, திகதி: 4. பாக்கு நீரிணையின் இருபுறமும் கப்பல்கள். இந்தியாவின் பக்கத்திலிருந்து உணவுக் கப்பல்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி நகர, இலங்கைப் போர்க்கப்பல்கள் அதை வழிமறிக்க ஆயத்தமாய் இலங்கைக் கடற்பரப்புள் அணிவகுத்து நிற்க... இனி ஒரு யுத்தம்தான் என்று பதபதைப்புடன் உலகம் இதை அவதானித்துக்கொண்டு நிற்க...*

எதுவும் ஏடாகூடமாகிவிடவில்லை. வந்த கப்பல்கள் பேசாமல் திரும்பிச் சென்றன. ஒரு சில மணித்துளிகள் நிதானமாய்க் களிந்தன. விடயம் அவ்வளவுதானா என்று ஆகிப்போனது. ஆனால் அவ்வளவுதானா..? அவை இலங்கையின் அரசியல் வரலாற்றையே திருப்பப் போகும் ஓர் அதிர்ச்சிகர நிகழ்வுக்கு முன்னான அமைதியான கணங்கள் என்பது யாருக்கும் அப்போது தெரிந்திருக்கவில்லை.
திடீரென வானத்தைக் கிழித்துக்கொண்டு யாழ்ப்பாணம் பறந்தன இரு இந்திய மிக் விமானங்கள். இலங்கை வான்படை வாளாதிருக்க, அவை உணவுப் பொதிகளைப் போட்டுவிட்டு திமிருடன் திரும்பின. அப்போதுதான் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். கைவிரித்தபடி பரிதாபகரமாகச் சொன்னார், "இலங்கைக்கு எந்த நட்பு நாடுகளும் இல்லை!"
13ம் திருத்தச் சட்டத்துக்கு வழிவகுத்த, இலங்கைச் சரித்திரம் மறக்கமுடியாத நிகழ்வு இது. இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்டது, வெறும் சாப்பாட்டு விவகாரம் அல்ல – அது "இனிப் போதும் நிறுத்து" என்று இந்தியா போட்ட ஒரு முற்றுப்புள்ளி. அப்போது இந்தியத்தூதராக இருந்த ஜெயோதின்ரா நாத் டீக்சிட் இந்திய விமானங்கள் இலங்கைக்குள் நுளையும் அறிவிப்பை இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு பழைய என்வலப் ஒன்றின் முகவரியை வெட்டிவிட்டு பின்புறத்தில் எழுதிக்கொடுத்தாகச் சொல்வார்கள் - அப்படி ஒரு அலட்சியம்.
இதன்பின் சுதுமலைக் கூட்டம், இந்திய ஹெலிகாப்டர் தரையிறங்கி அங்கிருந்தே புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியா அழைத்துச்சென்றமை, பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம், அதைக் கைச்சாதிட்டுவிட்டுத் திரும்பிய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை கடற்படை வீரன் (விஜமுனி ரோகண) துப்பாக்கிப் பிடியால் தாக்கியமை என்ற காட்சிகள் நிறைவேறி... தன் கடப்பாட்டைத் தவிர்க்க முடியாத இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் தனது மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றிய சட்டமூம்தான் 13ம் திருத்தச் சட்டமூலம். – எம்மைப் பொறுத்தவரை அது "மாகாணசபைச் சட்டமூலம்."
விட்டிருந்தால் இன்றுவரைகூட ஏற்பட்டிருக்க முடியாத சட்டமூலம் - ஏதோ இந்தியாவின் இடுக்குப்பிடியால் அன்று நிகழ்ந்தேறியது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரேமதாஸ ா பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்திருந்தார். ஜே.வி.பி. கொந்தளித்தது. சிங்களத் தரப்பில் எதிர்ப்பு ஏற்படுவது எதிர்பார்க்கக் கூடிய விடயம்தான். ஆனால் அவர்கள் மத்தியில் ஆதரவு தெரிவித்தவர்களும் இருந்தார்கள்.

*ஜனாதிபதி 13ம் திருத்தத்தை மேம்படுத்த உறுதியளித்திருக்கிறார் அவர் இதை நீக்க அனுமதிக்க மாட்டாரென நம்பிக்கை வேறு தெரிவிக்கிறோம்! (நம்ப முடியாதென நாமே எதிர்த்து வாக்களித்த ஜனாதிபதியை வசதிக்கேற்ப சிலசமயம் நம்பிக் கொள்கிறோம்போலும்!)*

என்ன வினோதமென்றால் தமிழ் தரப்பில் எழுந்த எதிர்புத்தான். மாகாணசபைத் தீர்வு தமிழ் மக்களின் மொத்த எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒன்றாக இல்லாவிட்டாலும் பாதகமான ஒன்றல்ல என்பதை ஒருபுறம் ஏற்றிருந்த நிலையில் மறுபுறம் இதற்கான கடும் எதிர்ப்பு தமிப் புறத்தில் தலைதூக்கியது. அந்தத் தமிழ் எதிர்ப்பு சிங்கள எதிர்ப்புடன் கைகோர்த்து நெருப்பாகி, ராஜீவ் காந்தியையும் பலிகொண்டு, மாகாணசபையையும் கரியாக்கிவிட்டது. அன்று கருகிய அந்த மாகாணசபை இன்றுவரை இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் துளிர் விடவே இல்லை.

அன்று கிடைத்திருந்த மாகாணசபை, வடக்கும் கிழக்கும் இணைந்த சபையாக இருந்தது. முதலமைச்சரை மத்திய அரசாங்கம் நினைத்த மாத்திரத்தில் நீக்க முடியாதவாறானதாக அமைந்திருந்தது. ஆனால் அது தமிழ் தரப்பின் எதிர்பின் துணையோடு கலைக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றத் தீர்ப்பினைப் பயன்படுத்திப் பிரிக்கப்பட்டுவிட்டது. வடக்கு கிழக்குக்கு தீர்வாக ஏற்படுத்தப்பட்ட சபை, வடக்கு கிழக்கைத் தவிர்ந்த இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் தொடர்ந்து இயங்கியது. இப்போது அண்மைக் காலமாகத்தான் கிழக்கில் மட்டும் சபை இயங்க- வடக்கு முடங்கிக் கிடக்கிறது.

ஒரு நாட்டுப் பாடல் ஞாபகம் வருகிறது:
நந்தவனத்திலோர் ஆண்டி
அவன் நாலாறு மாதமாய்க்
குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத்தாண்டி!

உடைத்துவிட்டோமா, இன்று நின்று ஒப்பாரியிடுகிறோம்! எதற்கு? குற்றுயிராய் இன்று எஞ்சியிருக்கும் அந்தச் சட்டமூலத்தையும் இல்லாதொழிக்க வேண்டுமென்று சிங்கள தரப்பிலிருந்து – ஆளும் உயர்மட்ட பிரமுகர்களிடமிருந்தும் - குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன. மாகாண சபைகளின் அனுமதியின்றி சில திட்டங்களைச் செயல்படுத்த முடியாதிருக்கின்ற ஒரு சட்டரீதியான முட்டுக்கட்டைகளைத் தகர்த்து, தங்கு தடையற்ற நிலைமையை உருவாக்குவதற்காக இவை ஒலிக்கின்றன. பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ. மற்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய ஜனாதிபதியின் சகோதரர்கள் இருவரும் இதில் முன்னிலை வகிக்கிறார்கள்.
இப்போதுதான் நாம் விழித்தெழுந்து, "13ம் திருத்தத்தை நீக்கினால் தமிழ் மக்கள் கொதித்தெழுவார்கள்" என்று கோஷமிடுகிறோம். பசில் ஆணவமாகப் பேசுவதாக குற்றம் சாட்டுகிறோம். இந்தியா தலையிட்டு இதனைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென விண்ணப்பிக்கிறோம். ஜனாதிபதி 13ம் திருத்தத்தை மேம்படுத்த உறுதியளித்திருக்கிறார் அவர் இதை நீக்க அனுமதிக்க மாட்டாரென நம்பிக்கை வேறு தெரிவிக்கிறோம்! (நம்ப முடியாதென நாமே எதிர்த்து வாக்களித்த ஜனாதிபதியை வசதிக்கேற்ப சிலசமயம் நம்பிக்கொள்கிறோம்போலும்!)
இச்சட்டமூலத்தை நீக்கினால் இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையிலான உறவில் பெரும் விரிசல் ஏற்படுமென டைம்ஸ் ஒஃப் இந்தியா கூறுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்திய ராஜீகவிவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய பேராசிரியர்களும் இது ஒரு தவறான அரசியல் நடவடிக்கையாக அமையும் எனக் கூறியுள்ளனர். தமிழ்நாட்டிலும் இதுகுறித்த எதிர்ப்புக் குரல்கள் இனி உரத்துக் கேட்கும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் இச் சட்டமூலம் நீக்கப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் வெளித்தெரியவில்லை. இது ஒரு சலசலப்பாக மட்டுமே இதுவரை காணப்படுகிறது.

எவ்வாறாயினும், தமிழ் மக்களின் இதுவரையான போராட்டத்தில் எழுத்துமூலமாக் கிடைத்திருந்த ஒரேயொரு தீர்வு இது ஒன்றுதான். – அப்போது இது போதாதென எதிர்த்தோம், இப்போது போகாதே எனக் கதறுகிறோம். எம் தலைவிதி அப்படி!



## SANDY போனாலும் அதன் பாதிப்புப் போகவில்லை

Sandy என்ற இந்தப் புயல் காற்று எங்களைத் தாண்டிச் சென்றுவிட்டாலும் அதனால் ஏற்பட்ட சேதங்களின் பாதிப்பு இன்னும் எங்களுடன் தான் இருக்கின்றது.

இதனால் செவ்வாய் காலை ஒன்ராரியோவில் கிட்டத்தட்ட 150,000 பேருக்கு மின்சாரம் இல்லாமல் போயுள்ளது. பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் அன்று மூடப்பட்டன. மரங்களின் முறிவும் கம்பங்களின் சரிவும் பொதுப் போக்குவரத்தைப் பாதித்திருந்தது. அத்துடன் ரொறொன்ரோ விமானநிலையம் தனது நான்கில் ஒரு விமானப்பயணங்களை ரத்துச்செய்தது. அன்று ரொறொன்ரோவில் பதியப்பட்ட காற்றின் அதியுயர் வேகம் 91 km/h ஆகும்.

இவற்றுடன் ளுயனெல 50 வயது மதிக்கத் தக்க ஒரு பெண்ணின் உயிரையும் எடுத்துச் சென்றுள்ளது. இது Keele Street & St. Clair Avenue பகுதியிலுள்ள கார்தரிப்பிடத்தில் நிகழ்ந்துள்ளது. காற்றினால் உடைக்கப்பட்ட 2 மீற்றர் அகலமான குறியீட்டுப் பலகை ஒன்று தலையில் மோதியதால் அந்தப் பெண் அவ்விடத்திலேயே உயிர் இழந்துள்ளார்.

## குற்றம் நிறைந்த பகுதிகள் எவை?

ரொறோன்ரோ நகரின் மத்திப்பகுதியும் வடமேற்குப்பகுதியிம் குற்றங்கள் அதிகமாக நிகழும் இடங்கள் என பொலிஸ் தகவல்கள் சொல்கின்றன. கடந்த ஏழு வருடத்துக்கு மேற்பட்ட விபரங்கள் ஒரு படமாக பதியப்பட்டுள்ளன.

திருமணம் என்ற பெயரில் மோசடி நடப்பதைத் தடுக்க முயற்சி துணைவர்கள் என்ற பெயரில் கனடாவுக்குள் வெளிநாட்டவர்கள் வருவதற்கான சட்டங்களில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. இனிமேல் துணைவர்களாக வருபவர்கள் தமது நிரந்தர வசிப்பிட உரிமையைப் பெறமுன்னர், அந்தக் குறித்த உறவு முறையில் இரண்டு வருடங்கள் இருக்க வேண்டும். அதற்கு முன்னர் அவர்கள் பிரிந்தால் அந்த விண்ணப்பதாரி நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவார். இந்த மாற்றம் குடியுரிமை மோசடியைத் தடுக்க உதவும் என்கிறார் குடிவரவு அமைச்சர் Jason Kenney.

## இலவச வாசிப்புக்கு மூடுவிழா!

பத்திரிகைகளை இணையத்தளங்களில் இலவசமாக வாசிக்கும் இன்றைய கட்டம் முடிவுக்கு வர இருக்கிறது. ரொறோன்ரோ ஸ்ரார் அடுத்த வருடத்திலிருந்து தனது இணையத்தளத்துக்குள் புகவிரும்புவோருக்கு ஒரு கட்டணம் அறவிடவுள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் நஷனல் போஸ்ட் தனது இணையத்தளத்துக்கு கட்டணம் வசூல் செய்ய ஆரம்பித்துள்ளது போல் குளோப் அண்ட் மெயிலும் போன வாரம் ஆரம்பித்துள்ளது. அவை பகுதி பகுதியாக நாடு முழுவதும் அமுலாக இருக்கின்றன.

## மூளை அறுவை சிகிச்சையில் ஒரு மைல்கல்



மூளை அறுவை சிகிச்சையில் மிகவும் பிரபல்யமான மருத்துவர் மைக்கேல் கசிமனோ இன்னுமொரு சாதனையை செய்து சரித்திரம் படைத்திருக்கிறார். இது தான் கனடாவில் முப்பரிமான காமிரா ஒன்றைப் பயன்படுத்தி மூளைக் கட்டியை ஒன்றை அகற்றிய முதலாவது அறுவை சிகிச்சை ஆகும். இது செயிண்ட் மைக்கேல் மருத்துவமனையில் 75 வயது நோயாளி ஒருவருக்கு செய்யப்படடப்பட்டிருக்கின்றது

## தொழிலாளரைக் காட்டிக் கொடுக்கும் முந்நாள் போராளி!

சமீபத்தில் தென் ஆபிரிக்காவில் மறிக்கானா பிளாட்டினம் சுரங்கத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தின்போது பொலிசார் சுட்டதில் 34 சுரங்கத் தொழிலாளர் கொல்லப்பட்டனர்.
ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சிறில் றாமபோசா (Cyril Ramaphosa) தொழிலாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சுரங்க அமைச்சர் உட்பட பலரிடம் கோரிக்கை விட்டதாக செய்திகள் வந்துள்ளன.

தற்போது 59வயதான சிறில் றாமபோசா 1987இல் இனவெறி ஆட்சிக்காலத்தில் சுரங்கத்தொழிலாளரின் வேதன உயர்விற்கான போராட்டத்தை முன்னின்று நடத்தியவர். வழக்கறிஞரான சிறில் றாமபோசா இன்று பெரிய தொழிலதிபராக இருக்கிறார். அவர் மறிக்கானா பிளாட்டினம் சுரங்கத்தின் உரிமையாளரான லொன்மின் கம்பனியின் பங்காளரும் நிர்வாகசபை உறுப்பினருமாவார்.

இனவெறிக்கு எதிராகப் போராடிய தலைவர்கள் பலர் இன்று ஊழல் செய்வதாகவும் சொத்துக்கள் சேகரித்துவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் இளைஞர் அமைப்பு சுரங்கங்களை அரசுடமையாக்கவேண்டும் என்று கோரிவருகிறது. இனவெறி ஆட்சி முடிவுக்குவந்து 18வருடங்களான போதும் தமது வாழ்க்கைத்தரம் முன்னேற வில்லை என்று நாட்டில் மக்களிடையே அதிருப்தி பரவலாகக் காணப்படுகிறது. தென் ஆபிரிக்காவில் 30வீதமான மக்கள் வேலையின்றி இருக்கிறார்கள்.

இதனிடையே தற்போது வெளிவந்துள்ள புள்ளிவிபரங்கள் வெள்ளையரின் சராசரி வருமானம் கறுப்பரின் வருமானத்தைவிட 6மடங்கு அதிகம் எனத் தெரிவிக்கின்றது.

வெள்ளையரின் சராசரி வருமானம் 365,000Rand ($42,000) ஆகவும் இந்தியரின் வருமானம் 251,000Rand ஆகவும் இருக்க கறுப்பரின் வருமானம் 60,600Rand ஆக மட்டுமே இருக்கிறது. தென் ஆபிரிக்காவில் மொத்த சனத்தொகையான 52மில்லியனில 79சதவீதம் கறுப்பு இனமக்களாகும்.

## துருக்கியில் குர்திஷ் மக்கள் ஆர்ப்பாட்டம்!



துருக்கிச் சிறைகளில் உண்ணாவிரமிருக்கும் 650 குர்திஷ் கைதிகளுக்கு ஆதரவாக துருக்கி நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 6வாரங்களாக உண்ணாவிரமிருக்கும் கைதிகளின் கோரிக்கைகள் கல்வி, சட்டத்துறைகளில் குர்திஷ் மொழி பாவனைக்கு உரிமை மற்றும் PKK தலைவர் அப்துல்லா ஒகலனின் சிறைத்தனிமைக்கு முடிவுகட்டுதல் என்பனவாகும். உண்ணாவிரதிகள் கட்டியான உணவுகளை (solid food) நிராகரித்துவருகிறார்கள்.

ஒகலனிற்கு 1999இல் மரணதண்டனை விதிக்கப்பட்டது. 2002இல் துருக்கியில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டபின் அவரது மரணதண்டனை ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டது. துருக்கியில் குர்திஷ் மக்கள் மொத்த சனத்தொகையில் சுமார் 20சதவீதமாகும். அங்கு PKK 25 வருடங்களுக்கு மேலாகச் சுயாட்சிகோரி போராடிவருகிறது. இப்போரில் சுமார் 40ஆயிரம் பேர் இறந்துவிட்டனர். குர்திஷ் மக்கள் துருக்கி, ஈராகஇ சிரியா, ஈரான், ஆர்மீனியா போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள்.

காலனித்துவநாடுகள் வரைந்த எல்லைக்கோடுகளால் அவர்கள் பிரதேசங்கள் பலநாடுகளுக்கும் பிரிந்து சென்றன. ஈராக்கில் 1992இற்குப் பிறகு குர்திஷ் மாகாணங்கள் சுயாட்சி பெற்றுள்ளன. தற்போது நடைபெறும் சிரிய யுத்தத்தினையும் குர்திஷ் மக்கள் சுயாட்சி நோக்கிய தமது பயணத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். சிரிய படைகள் பின்வாங்கிய குர்திஷ் பிரதேசங்களில் குர்திஷ் போராளிகள் எதுவித பிரச்சினையுமின்றி புகுந்திருக்கிறார்கள்.

சிரியாவில் யுத்தம் தொடங்கியபின் துருக்கி, ஈராக் எல்லைகளில் குர்திஷ் போராளிகளுக்கும் துருக்கிய படைகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டவண்ணமுள்ளன. இவ்வாறே குர்திஷ் போராளிகளுக்கும் துருக்கிய படைகளுக்குமிடையே சிரியாவிலும் மோதல் ஏற்படட்டும் என்ற எண்ணத்தில் சிரியப்படைகள் குர்திஷ் பிரதேசங்களிலிருந்து வெளியேறியிருக்கலாம்.


SUPER SAVINGS
Throughout The Store
Memory Foam Mattress
UP TO 40% OFF
4 Pc Sofa Set W/Coffee Table
Bonded Leather
$899
$399
Memory Foam Mattress
From
$999
Lowest Price Guaranteed
Colour Choices Available
Bonded Leather
Sectional Sofa
$949
Bonded Leather
$999
Double Bed
From
$349
Bonded Leather
$1199
3 Pc Sofa Set W/5/Recliners
Top Grain 100% Genuine Italian
Leather Sectional Sofa W/ 4 RECLINERS
$2399
Complete Bedroom Set
$899
Bonded Leather
$999
3 Pc Sofa Set
Complete Bedroom Set
$1199
$299
$949
Complete Bedroom Set
$999
Italian Wardrobe
$599
7pc Dinette
$599
$139
Single
Folding Bed
$149
Futon Bed
$499
Bench
$299
$99
$109
$199
$299
Sunflowers
furniture
3024
KENNEDY RD.
416.609.8556

# சவால் நிறைந்த வடபகுதி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்.

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையுடன் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 22 வருடங்கள் நிறைவடைகின்றன. 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை அடுத்து இடம் பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இரண்டு மணித்தியாலயத்திற்குள் முஸ்லிம்களை வெளியேறப் பணித் ததையடுத்து, உடுத்திய உடுப்புடன் அவர்கள் வெளியேறிய வேண்டியும் ஏற்பட்டது.

அது மட்டுமன்றி, மீள்குடியேற்றம் தொடர்பில் அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் பின்பற்றப்படும் நடை முறைகள் இம்மக்கள் தொடர்பில் பின் பற்றப்படவில்லை எனவும், மீள் குடியேறுவோருக்கு வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவுகள் வழ ங்கப்படவில்லை எனவும் தெரிவிக் கப்படுகிறது. உள்ளூர் அரசாங்க அதிகா ரிகள் வழங்க வேண்டிய உதவிகளை வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மற்றொருபுறம், 22 வருடங்களுக்கு முன்னர் சுமார் 75 ஆயிரம் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளி யேற்றப்பட்டார்கள் எனினும்



வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சுமார் 75 ஆயிரம் முஸ்லிம்கள் புத்தளம் மற்றும் அநுராதபுரம் உட்பட பல மாவட்டங்களில் தஞ்சமடைந்து அகதிகளாகினர். தமது பாரம்பரிய வாழிடத்தை இழந்து வலியுடன் கடந்த 22 வருடங்களாக வாழ்ந்து வந்த இம்மக்களின் மீள் குடியேற்றம் யுத்தம் முடிவடைந்து 3 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் பிரச்சினைக்கு உரியதொன்றாகவே இருக்கிறது.

2009, மேயின் பின்னர், தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட்ட போதிலும் முஸ்லிம்களின்மீள்குடியேற்றம் குறித்து போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகிறது. அரசாங் கம், முஸ்லிம் தலைமைகள், தமிழ் தலைமைகள் என சகலராலும் கவனிக்கப்படாத ஒரு விடயமாகவே இவ்விடயம் இருந்து வருகிறது.

இதனால் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் சுயமாக மீள்குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.
யாழில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகுள் யுத்தத்தினால் பூரணமாக அழிந்து போனதொரு நிலை யில் இவர்களின் மீள்குடியேற்றம் இலகுவானதொன்றாக அமைய வில்லை.

இன்று அவர்களின் சனத்தொகை பெருக்கமடைந்துள்ளது. எனவே அதிகரித்துள்ள மக்களுக்கான குடியிருப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிக்கல் எதிர் நோக்கப்படுகிறது. வடக்கில் புதிய காணிகளை பெற்றுக் கொள்வது இலகுவாக இருக்காது. எனவே, குடியிருப்புப் பிரச்சினை இம்மக்களின் மீள்குடியேற்றத்தில் பாரிய சவலாக அமையும்.

மீள்குடியேறியோருக்கு வழங்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்டத்தில் இம்மக்களும் வீடுகள் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்த போதிலும், நடைமுறையில் அதுவும் சாத்தியமற்றது என்றே தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வீட்டுத் திட்டத்தில் வீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளால் முஸ்லிம்கள் வீட்டைப் பெறமுடியாது போகும் என்றே தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் இம்மக்களுடைய மீள்குடியேற்றம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகளும் அக்கறை காட்டத் தொடங்கியி ருக்கியிருக்கிறார்கள்.

# செல்வாக்கு சரிந்து வரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

இலங்கையில் கடந்த காலங்களில் அதாவது 1983ம் ஆண்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் பின்னர் அரச, தமிழ் தரப்பினர்களுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சு வார்த்தைகளில் இந்நாட்டு முஸ்லிம்களைப் பிரதிநிதிப்படுத்தவோ அல்லது அவர்களின் குறை நிறைகளை அவ்வாறான பேச்சு வார்த்தைகளில் முன் வைக்கவோ அவர்களுக்கென ஒரு கட்சி இல்லாதபோதுதான் ஒரு முஸ்லிம் கட்சியின் அவசியம் உணரப் பட்டது. இதைத் தொடர்ந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருப்பெற்று இங்குள்ள முஸ்லிம்கள் மத்தியில் அதிக செல்வாக்கையும் பெற்றது.

"பிழையான வழியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செல்லுமாயின் என்னையும் அழித்து எனது கட்சியையும் அழித்துவிடு இறைவா" என்று கட்சியின் மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் கூறியதை தலைவரின் பாசறையில் வளர்ந்ததாகக் கூறிக் கொண்டிருக்கும் ஒருவரிடம் சொன்ன போது அவர் நான் தெரிவித்த அக்கூற்றுக்கு ஒரு சிறு மாற்றம் செய்து "எங்களையும் அழித்து இக்கட்சியையும் அழித்து விடு இறைவா" என்றுதான் தலைவர் கூறியதாகத் தெரிவித்தார்.

எது எவ்வாறிருப்பினும் இக்கட்சியின் ஸ்தாபகர் மர்ஹூம் ஆ.ர்.ஆ. அஷ்ரப் அவர்கள் மரித்ததன் பின்னர் இக்கட்சி அழிவுப் பயணத்தை நோக்கிய பாதையில் நகர்ந்து கொண்டிருப்பதை அனைவராலும் உணரக் கூடியதாகவே உள்ளது.

முஸ்லிம்களின் ஒரேயொரு தனித்துவக் கட்சியாகவிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு அஷ்ரப் மறைந்த சூட்டுடனேயே றஊப் ஹக்கீம் அவர்கள் தலைவராக நியமிக்கப் பட்டார். இதனால் பேரியல் அஷ்ரப் அவரது கணவர் மர்ஹூம் அஃரபினால் உருவாக்கப் பட்ட மற்றைய கட்சியான தேசிய ஐக்கிய முன்னணியைப் National United Alliance (NUA) பொறுப்பேற்று அதற்குத் தலைவியானார். கட்சியும் இரண்டாகப் பிளவு பட்டது.

றஊப் ஹக்கீம் தலைவரானதைத் தொடர்ந்து, இக்கட்சி அமைச்சர் அதாவுல்லாஹ் தலைமையில் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் என்றும் மேலும் இரண்டாகப் பிளவுபட்டது. இக்கட்சிகள் இரண்டும் றஊப் ஹக்கீமிற்கும் அவரது கட்சிக்கும் எதிராகவே இன்றும் செயற்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் அதாவுல்லா, றிசாத் பதியுதீன் ஆகிய இருவருக்கும் றஊப் ஹக்கீமிற்கும் இடையிலான முரண்பாடும் அதிதிருப்தியும்தான் எனக் கூறப்படுகிறது.

தலைவர் றஊப் ஹக்கீமின் தன்னிச்சையான போக்கும், நடவடிக்கையும் நான்காகப் பிளவுபட்டிருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை மீண்டும் ஒரு பிளவிற்கு இட்டுச் செல்லக்கூடும் என எதிர்வு கூறப்படுகிறது. றஊப் ஹக்கீம் கட்சியின் தலைமைப்பீட (Party High Command) அங்கத்துவத்தை அதிகரித்திருப்பதும் அதற்கேற்றாற்போல் கட்சிப் பதவிகளில் தனது கையாட்களை அமர்த்தியிருப்பதும் இதற்கு ஒரு சான்றாகவே தெரிவிக்கப்படுகிறது.

சலுகை தேவையில்லை உரிமைதான் தேவையென்றும் அபிவிருத்தி அரசின் கடமை என்றும் கோசமிட்ட இக்கட்சியின் தலைவர்கள் இவற்றையெல்லாம் மறந்து இன்று சலுகைக்காகவும் பதவிக்காகவும் அரசிடம் மண்டியிடுவதும் சரணாகதி அரசியல் நடாத்துவதும் வாக்காளர்கள் மத்தியில் அதிகளவிலான அதிதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் உரிமைகளுக்காகப் போராடவும், கட்சியின் பேரம் பேசும் சக்தியை அதிகரிப்பதற்காகவும் தேர்தல்களின்போது அதிகளவில் இக்கட்சிக்கு வாக்களித்த மக்கள், முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை அரசுடனோ அல்லது எதிர்க்கட்சியுடனோ அல்லது தமிழ்த் தரப்பினருடனோ நடத்திய பேச்சுக்களின்போது என்ன பேசப் பட்டதென்றோ அல்லது அதன் பெறுபேறுகள் என்னவென்றோ இன்றும் அறியாதுள்ளா் என்றே கூறவேண்டும். இவர்கள் அறிந்ததெல்லாம் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடனான பேச்சுக்களின் பின்னர் கட்சித் தலைவர் ஹக்கீமிற்கு ஒரு அமைச்சுப் பதவியும், தவிசாளர் பஷீரிற்கு ஒரு பிரதி அமைச்சர் பதவியும் கிடைக்கப் பெற்றதையே.

கிழக்கு மாகாண சபை அண்மைத் தேர்தலின் பின்னர் நடந்த பேச்சுவார்த்தையில் தமிழ்த் தரப்பினர் முஸ்லிம் காங்கிரஸிற்கு முதலமைச்சர் பதவியை தாரைவார்க்க முன் வந்தபோதும் அதை ஏற்காது அரசுடன் கூட்டுச் சேர்ந்தமை வாக்களித்த மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடல்லாமல் தலைமைத்துவத்தின் மேல் வெறுப்பையும் சேர்த்துள்ளது.

இக் கைங்கரியத்தைச் செய்த முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் கலைக்கப்படவுள்ள மத்திய அரசின் அமைச்சரவையில் இரண்டு அமைச்சர் பதவிகளையும் மூன்று பிரதி அமைச்சர் பதவிகளையும் எதிர்பார்த்திருப்பதாகச் சொல்லப்படுவது கட்சியினரின் சீற்றத்திற்கும் களங்கத்திற்கும் வழி வகுத்துள்ளதையே கோடிட்டுக் காட்டுகிறது.

*-எம்.ஐ.எம்.எஸ். அன்வர்-*

500 BUSINESS CARDS - ONLY $25
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும் அழையுங்கள்!
416.284.4004

# சீய்...Man!

**இராவணன்**



நவம்பர் 3ம் திகதி ரொரண்ரோவில் நடைபெறுவதாக தண்டாரம் போட்டு முழங்கி அறிவித்த இளையராஜாவின் இசை நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டு விட்டது. காரணம் நிலம். மண் ஆசை யாரை விட்டு வைத்தது? சீமானும் இளையராஜாவும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்த நிலம் "நிலம்" என்ற புயல். இளையராஜாவின் ரொரண்ரோ நிகழ்ச்சி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து நிகழ்ச்சிக்கான எதிர்ப்பு ஆரம்பமாகிவிட்டது. நவம்பர் மாதம் மாவீரர் மாதம், மண்ணிற்காக மரணித்தவர்களை நினைவு கூரவேண்டும் எனவே நவம்பர் மாதத்தில் நிகழ்ச்சியை நடாத்த வேண்டாம் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. இதன் பின்னணியில் தமிழகத்தைச் சேர்ந்த இயக்குனர் சீமான் உள்ளார். இவரது நாம் தமிழர் கட்சி இளையராஜாவின் நிகழ்ச்சிக்கு எதிராக குரல் கொடுத்தது. இக்கட்சியின் கனடிய தலைகள் இங்கு குரல் எழுப்பின. இந்தத் தலைகள் இளையராஜாவின் நிகழ்வுக்கான ஊடகவியலாளர்கள் மாநாடு சக இராப்போசன விருந்து நடைபெற்ற ரொரன்ரோ கொன்வென்சன் மண்டபத்துக்கு வெளியே நின்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கின.

மாவீரர் தினம் நவம்பர் 27ந் திகதி. இதனை முழு மாதமாக மாற்றிய பெருமை இந்த சீமான் குழுமத்தையே சேரும். சுப வீரபாண்டியன் கூறியது போல் ஒவ்வொரு ஈழத் தமிழ் வீட்டிலும் ஒவ்வொரு மாவீரர் உண்டு. ஒரு வருடத்தின் ஒவ்வொரு நாளிலும் போராளிகள் இறந்துள்ளார்கள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும் ஏன் வருடம் முழுவதும் மாவீரர் தினம் கொண்டாட முடியாது. விடுதலைப் புலிகள் தங்களது இயக்கத்தினரையே மாவீரர் என்கின்றார்கள். விடுதலைப் போராட்டத்தில் இறந்த அனைத்து போராளிகளுமே மாவீரர்கள் என்றே நான் கூறுவேன். இதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. முதல் தமிழ் பெண் மாவீரர் ஈபி எனப்படும் ஈழ மக்கள் புரட்சிகர அமைப்பைச் சேர்ந்தவர்.

27ந் திகதி ஏன் முழு மாதமாக மாற்றப்பட்டது? இதற்கு மாற்றியவர்கள் தரப்பிலிருந்து எந்த வித தெளிவான பதிலுமில்லை.

இணையத் தளங்களில் பொய்யான பெயர்களில் மிரட்டல்கள் தொடர்ச்சியாக வெளியாகின. குறிப்பாக முகநூலில் இது அதிகமாகவே காணப்பட்டது. கவிதா செந்தில்குமார் என்ற பெயரில் இளையராஜாவுக்கு எதிராகவும் நிகழ்வுக்கு நுழைவுக் கட்டணங்கள் வாங்கியோருக்கு எதிராகவும் அவதூறுகள் பதிவிடப்பட்டன. உதாரணத்துக்கு ஒரு சுவையான கருத்து. இவ்வாறான சிந்தனைக் கருத்துக்கள் அதீத அறிவாளிகளுக்கே உள்ளது. "ஈழமா, இசையா என்றால் ஈழம் தான் தேர்வாக இருக்க வேண்டும். சுடுகாட்டில் இசைக் கச்சேரி நடாத்த முடியாது" இருக்க வேண்டும் என்பது ஒரு அதிகாரக் குரலே. சுடுகாட்டில் இசைக் கச்சேரி நடாத்த முடியாது. அதே சுடுகாட்டில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். அதில் உள்ள ஸ்கைடோமில் தான் நிகழ்வு நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியை யார் நடாத்துகின்றார்கள் அவர்களது பின்னணி என்னவென்று அறியாமலே அவர்களுக்கு ஆதரவும் வழங்கப்பட்டது. எதிர்ப்பும் வெளிக்கிளம்பியது.

தமிழ்க் காங்கிரஸ் அமைப்பு வெளிப்படையாகவே நிகழ்ச்சியை எதிர்ப்பவர்களுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டது. மாவீரர் தினத்தை கொண்டாடுவது ஒவ்வொருவரது தனிச் சுதந்திரம். அதனை யாரும் கட்டுப்படுத்த முடியாது என தனது அறிக்கையில் சுட்டுக் காட்டியது. பேஸ்புக் போராளிகள் பலர் தாங்கள் நிகழ்ச்சிக்கு போவோம் என நூலுக்கு பின்னே நின்று முகத்தை காட்டினர். இவர்கள் சார்ந்த அமைப்புக்கள் எதுவும் நிகழ்ச்சிக்கு எதிராக உள்ள ஜனநாயக மீறலை சுட்டிக் காட்டவும் குரல் கொடுக்கவும் தவறிவிட்டன.

முகநூலிலும் இணையத் தளங்களிலும் சீமானின் ஆதிக்கத்துக்கு எதிராக வலுவான குரல்கள் எழுந்துள்ளன. வன்னித் தமிழரை எவ்வாறு புலம் பெயர் தமிழர்கள் கட்டுப்படுத்த முடியாதோ அவ்வாறே புலம் பெயர் தமிழரை சீமான் கட்டுப்படுத்த முடியாது. சீமானும் அவர்களைச் சார்ந்தவர்களும் இதனையே செய்ய முயற்சிக்கின்றனர். சீமான் புலம் பெயர் மக்களால் பல லாபங்களைப் பெற்றுள்ளார். நலிந்து கொண்டு சென்ற இவரது சினிமா வாழ்வு புலம் பெயர் மக்களது பணத்தில் முன்னேற்றம் கண்டது. தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் பெரும்பாலேனோர் புலம் பெயர் தமிழர்களது செல்வத்தை கொள்ளையடிக்கின்றனர். முள்ளி வாய்க்கால் படுகொலைகளை நிறுத்துவதற்கு வைகோவிற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டார் என்ற கருத்து ஒன்று உண்டு. சிதம்பரம் முன்வைத்த சமாதான உடன்பாட்டை வைகோ வே எதிர்த்தார் எனச் சொல்லப்படுகின்றது. இது உண்மையாயின் வைகோ வின் தமிழ்க் கோசத்தின் பின்னணி களங்கமானது. 1800களின் பின் பகுதிகளில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு சென்ற இந்தியரை இந்தியராகவே இவர்கள் கருத மறுக்கின்றனர். அண்மையில் நடைபெற்ற உலக கிண்ண ரி20 போட்டியை வென்ற மேற்கிந்திய அணியில் ஏழு வீரர்கள் இந்தியர்கள். அணித் தலைவர் சாமியின் முன்னோர்கள் தமிழ்நாட்டில் இருந்து புலம் பெயர்ந்தோர். சாமி ஒரு தமிழர். சீமான் ஏற்பாரா?

புலம் பெயர் தமிழரை மட்டும் தமிழராக ஏற்பதன் காரணம் என்ன? பிரபாகரனுக்கு பிறகு புலம் பெயர் தமிழர் மத்தியில் உள்ள தலைமை வெற்றிடத்தையும் அவர்களது பணத்தின் மீதும் வைக்கப்பட்டுள்ள குறியே இது. இரண்டாவதாக முஸ்லீம் சகோதரத்துவம் போல் தமிழ் சகோதரத்துவம் ஒன்று அமைத்து அதனை தமிழ் நாட்டின் தலைமையில் வைத்திருக்க வைக்கப்பட்டுள்ள பொறி இது. ரெசோ மாநாடு, சீமான் போன்றவை இதனையே வெளிப்படுத்துகின்றது. தமிழ்ச் சகோதரத்துவம் எனப்படுவது புலம் பெயர் தமிழர்களையும் அவர்களுக்காக ஈழத் தமிழர்களையும் தமிழ்நாட்டுத் தமிழர்களையுமே இது உள்ளடக்கியுள்ளது. மலேசியா மற்றும் இலங்கை மலையகத் தமிழர்கள் இதற்குள் அடக்கமில்லை. இது ஆரோக்கியமானதல்ல. இதனை புலம் பெயர் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடி சூழ்ந்துள்ள வேலைகளில் இனரீதியான போராட்டங்களுக்கு உலகம் செவிசாய்ப்பது கடினம். எமது பிரச்சினையை சீமான் போன்றோர் தீர்த்து வைப்பார்கள் என நினைப்பதே ஒரு முட்டாள் தனத்தின் வெளிப்பாடு.

தொடர்ச்சியாக புலம் பெயர் தலைமைகள் மக்கள் பணத்தில் செல்வந்தமாக வாழ்கின்றனர். பீட்சா கடைகள், பல சரக்கு கடைகள், தளபாடக் கடைகள், வெதுப்பகங்கள் என செல்வச் சமூகமாக மாறிவிட்டனர். இதன் வெளிப்பாடே இருபதாயிரம் பேர் இளையராஜாவின் நிகழ்வுக்கு நுழைவுக் கட்டணம் வாங்கியுள்ளனர். இந்த எண்ணிக்கை உண்மையாயின் இது சீமான் குழுமத்துக்கு எதிராக எழுந்துள்ள குரலாகவே கொள்ள முடியும்.

மாவீரர் தினத்தை மாவீரர் மாதமாக மாற்றி மாவீரர்களை மக்கள் மறக்கச் செய்த பெருமை சீமான் குழுமத்தையே சேரும்.

# பெண்கள் செயற்படுகிறார்கள்

**சுல்பிகா**



## ஆவணக்காப்பு: அனோமா ராஜகருணா

அண்மையில் ஆவணபுகைப்பட தயாரிப்பாளரும், புகைப்படப் பிடிப்பாளருமாகிய அனோமா ராஜகருணா வரலாற்றை பாதுகாத்தல், ஆவணப்படுத்துதல் போன்றதன் அவசியம் பற்றி "யங் ஆசியா" தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அனோமா ஒரு சிங்களகவிஞர், பெண்ணியவாதி, சமாதான செயற்திறவாதி. பெருமளவு போர் அனர்த்தம், இனவாதம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய கவிதைகளையும், புகைப்படக்கண்காட்சிகளையும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மட்டக்களப்பு உட்பட இலங்கையின் எல்லாப் பெருநகரங்களிலும் 2000ம் ஆண்டிலிருந்து நிகழ்த்தி வருகின்றார்.

குறிப்பாக ஜூலை 1983 இற்குப் பின் வாழ்வு, தனிமை, ஆயினும் வலிமை, பதினேழு வருடங்கள் பல்லிடப்பெயர் வாழ்வு போன்றன அவரால் நிகழ்த்தப்பட்ட ஆவணக்காட்சிகளில் சிலவாகும்.

மிக முக்கியமாக வரலாற்றை ஆவணப்படுத்துவதிலுள்ள அரசியல் மயப்படுத்துதல், பாரபட்சம், கண்டு கொள்ளாமை, புறக்கணிப்பு போன்ற நாட்டின் சக பிரஜைகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி மிகக்காரசாரமான கருத்துக்களை அவர் முன்வைக்கிறார்

1) இலங்கையின் வரலாற்றை ஆவணப்படுத்தும் வரலாறானது ஆட்சியாளர்கள் அல்லது உயர்தட்டு அல்லது அரசியல்வாதிகளின் வாழ்க்கையையும், வெற்றிகளையும் ஆவணப்படுதுவதாகவே இருந்து வந்துள்ளது. அக்காலங்களில் பொதுமக்கள் வாழ்ந்ததற்கான எந்த தடயங்களையும் ஆவணப் படுத்தலுக்காக தெரிவு செய்யப்பட வில்லை, அவை அவமானங்களாக நோக்கப்பட்டிருக்கலாம். காலனி த்துவ வரலாற்றுக்கு பின்னரான "சுதந்திர சமூகத்தின்" சமூக அரசியல் வரலாற்றையும் பதிவு செய்வதற்கான எந்த கவனமும் சிரத்தையும் எடுக்கப்படவில்லை. குறிப்பாக வடகிழக்கு மக்களின் அரசியல் போர், துன்பியல் வாழ்வு பற்றிய எந்தப்பதிவுகளும் இலங்கையின் வரலாறாக, அதன் பகுதியாக ஏன் ஏற்றுக் கொள்ளப்படாதிருக்கின்றது. அது இலங்கையின் வரலாற்றின்

16ம் பக்கம்...

# நான் ஒரு பிற்போக்குவாதி!

**சிவதாசன்**

அசை

“All men are created equal, that they are endowed by their Creator with certain unalienable Rights, that among these are Life, Liberty and the pursuit of Happiness”

பலருக்கும் தெரிந்த, பரிச்சயமான இந்த வாசகம் அமெரிக்க குடியரசின் உருவாக்கத்தின்போது வரையப்பட்டது. உள்ளூர்க் காரர்களுக்குப் புல்லரிக்க வைக்கும் இந்த உபதேசத்தை அமெரிக்கா உலகில் ஏனைய நாடுகளுக்கோ மக்களுக்கோ ஓத முடியாது.

இந்த மாதம் 6ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வருகிறது. தமிழர்களில் பெரும்பாலானோர் ஒபாமா மீண்டும் தெரிவு செய்யப்படவேண்டும் என விரும்புவார்கள். அதற்கு பெரும் பாலான காரணம் அவரது நிறம் அடுத்தது அவர் சார்ந்த கட்சி ஒருவகையில் தீவிர வலதுசாரியல்லாதது. குடிவர வாளருக்கு நட்பானது என்றும் சிலர் நம்புகின்றனர். பல ஏழைகளுக்கு மருத்துவ வசதி கிடைக்க வழி செய்தவர் என்ற பெருமையும் அவருக்குண்டு. நல்லதுதான்.

“சமூகத்துக்கு நல்லது செய்வோம் என்று புறப்படுபவர்களால்தான் அதிக கேடுகள் விளைகின்றன” என்று ஐராவதி கார்வே மகாபாரத பாத்திரங்கள் பற்றி முன்வைத்த விமர்சனமொன்றில் கூறியிருந்தார். அவரது கூற்று எவ்வளவு தூ ரம் உண்மையானது என்பதற்குப் பல உதாரணங்கள் இலகுவாகக் கிடைக்கும்.

ஒபாமாவைப் பற்றிய எனது பார்வையும் இந்த ஐராவதி அச்சில் வார்க்கப்பட்டதுதான்.

முற்போக்குவாதிகளிடமும், சமூக சேவையாளர்களிடமும் எமக்கு எழும் எதிர்பார்ப்புகள் அதிகம். அவர்கள் தவறு செய்யவே மாட்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுவதும் சகஜம். இந்த நம்பிக்கைகள் தகர்க்கப்படும்போது ஏற்படும் வெறுப்பும் அவ நம்பிக்கையும் ஒட்டுமொத்தமாக இந்த முற்போக்கு சமூகத்தின்மீதே ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஒபாமாவில் எனக்கு ஏற்பட்டிருப்பது அப்படியான ஒரு வெறுப்புத்தான்.

முதலாவது தடவை அவர் தேர்தலில் நின்றபோது முன் வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல முக்கிய விடயங்களை முன்வைத்தார். குவாண்டனமோ சிறையை மூடி அங்குள்ள நெடுநாட் கைதிகளைச் (பயங்கரவாதிகளெனக் கைது செய்யப்பட்ட வெளிநாட்டுக்காரர்கள்) சட்டத்தின் முன் கொண்டு வருதல் என்பது முதன்மையானது. பயங்கர வாதிகளெனக் கருதப்படுபவர்களை அந்தந்த நாடுகளில் வைத்துக் கொலை செய்வது என்ற புஷ் நிர்வாகத்தின் முடிவை மீள் பரிசீலிப்பது, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளிலிருந்து இராணுவத்தைத் திருப்பி அழைப்பது போன்ற வாக்குறுதிகளையும் அவர் கொடுத்திருந்தார்.

குவாண்டனமோ சிறை இன்னும் மூடப்படவில்லை. பயங்கர வாதிகளாகக் கருதப்படுபவர்கள் அந்தந்த நாடுகளிலேயே வைத்து ஆளில்லா விமானங்களால் குறிபார்த்துக் கொல்லப்படுகிறார்கள். இந்நடவடிக்கையின்போது ஒவ் வொரு பயங்கரவாதிக்கு பத்து அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப் படுகிறார்கள். இது மனிதாபி மானமற்றது என்பது மட்டுமல்ல சர்வதேச சட்டங்களையே மீறுவது என்று சுட்டிக்காட்டியபோதும் ஒபாமா



அதைத் தொடர்ந்து செய்து வருகிறார். பாகிஸ்தானின் அனுமதியின்றியே அந்த நாட்டின் இறையாண்மையை மதிக்காது அங்கு வைத்து பின் லாடன் கொல்லப்பட்டார்.

இதில் முக்கியமான விடய மென்னவென்றால் யார் யார் பயங்கரவாதிகள் என்ற பட்டியல் சீ.ஐ.ஏ. யினாற் தயாரிக்கப்பட்டு ஒபாமாவுக்கு கையளிக்கப்படுவதும். அதில் எவர் எப்போது கொல்லப்பட வேண்டும் என்பதை ஒவவொரு வாரமும் ஒபாமாவே உறுதிப் படுத்துவதும்தான்.. ஆளில்லா விமானங்கள் அமெரிக்க மண்ணி லிருந்தே ஏவப்பட்டு இக் கொலைகள் நிறைவேற்றப்படும். அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவது பற்றி ஜனாதிபதிக்கு எந்தவித கவலையுமில்லை. அமெரிக்க மக்களின் பாதுகாப்புக்கு எதிராக உலகில் எந்த மூலையிலும் இருக்கக்கூடிய “பயங்கரவாதிகளைத்” தேடி அழிப்போம் என்று றேகன் தொடக்கம் புஷ் வரையில் கர்ச்சித்தனர் ஆனால் செயலில் காட்டவில்லை. ஒபாமா அப்பயங்கரவாதிகளை நீதிக்கு முன் நிறுத்துவேன் என்று கர்ச்சித்தவர் பயங்கரவாதிகளை மட்டுமல்ல பொது மக்களையும் சேர்த்தே கொல்கிறார்.

பின் லாடன் கொலை செய்யப்பட்டபோது ஜோர் புஷ் இடம் கருத்துக் கேட்கப்பட்டது. “நான் அதைத் தவிர்த்திருப்பேன்” என்ற சாரத்தில் அவரது பதில் இருந்ததாக ஊடகமொன்று குறிப்பிட்டிருந்தது. புஷ் ஆட்சியின்போது பின் லாடன் Tora Bora குகைகளில் இருப்பது சீ.ஐ.ஏ.னாற் கண்டுபிடிக்கப்பட்டது. அவரைக் கொல்வதற்கு ஆளணி தரும்படி கேட்கப்பட்டதற்கு புஷ் நிர்வாகம் மறுப்புத் தெரிவித்ததால் அது சாத்தியமற்றுப் போனது. செப்டம்பர் 11 ன் ரிஷி மூலத்தை அறிந்தவர் புஷ். அரசியற் காரணங்களுக்காகவேனும் அவர் அதைச் செய்யவில்லை. தனது தேர்தலுக்காக ஒபாமா அதைச் செய்திருக்கிறார்.

“நண்பன் என்பவன் சந்தர்ப்பம் தேடியபடி கூடவே இருக்கும் எதிரியே” என்று இயக்குனர் சசிகுமார் கூறுவார். முன்னால் நின்று குத்தும் எதிரியைவிட பினால் இருந்து குத்தும் நண்பன் ஆபத்தானவனென்று அறிவதற்கு நாம் விஞ்ஞானிகளாகவிருக்க வேண்டுமென்பதில்லை.

ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் போர்களை முடிவுக்குக் கொண்டுவரும் ஒபாமாவின் திட்டங்கள் மனிதாபிமான காரணங்களுக்காகத் தீட்டப் பட்டவையல்ல. சீனாவுக்கு எதிரான போர் வியூகங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஆளணிகள் தேவை. எனவே இராணுவம் மீளழைக்கப்படுகிறது. தமது ஆளணிகளுக்கு ஏற்படும் இழப்புக்கள் அமெரிக்க மக்களின் விரக்தியைச் சம்பாதித்துக் கொடுத்துவிடும் என்பதற்காகத்தான் ஆளில்லா விமானங்களின் மூலம் போர் முன்னெடுக்கப்படுகிறது. எனவே ஒபாமா போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தவரென்பது அரசியல், இராணுவ காரணங்களுக்காகவேதான் மனிதாபிமான காரணங்களுக்காக அல்ல.

சரி, அப்படியானால் அவரது போட்டியாளர் மிட் றொம்னி அதி தீவிர வலதுசாரிதானே அவரால் இன்னும் அதிக போர்களும் அதிக மனிதக் கொலைகளும் ஏற்பட வாய்ப்புகளுண்டு என்கிறீர்கள். சமீப அமெரிக்க வரலாற்றைப் பார்த்தால் அதில் உங்களுக்கான விடையிருக்கிறது. வியட்நாம் போரின்போது படையெடுப்புக்குக் காரணமானவர்களான ஜனாதிபதிகள் கென்னடி, ஜோன்சன் போன்றவர்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள். போரை முடிவுக்குக் கொண்டுவந்த நிக்சன், போர்ட் போன்றவர்கள் தீவிர வலதுசாரியாகக் கருதப்படும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். யப்பான் மீது அணுக் குண்டுகளை வீசியது ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஹறி ட்ருமன் நிர்வாகம். இப்படிப் பல.

மக்களின் சமூக ஈடேற்றத்துக்காகப் போராடப் புறப்பட்டு மில்லியன்களில் உயிர்ப்பலி எடுத்த வேறு உதாரணங்களுமுண்டு. மாவோவின் புரட்சி 29 மில்லியன் மக்களைக் காவுகொண்டது. ஸ்டாலின் ஆட்சியில் 3-5 மில்லியன் விவசாயிகள் பட்டினியாற் செத்துப் போனார்கள்.

ஒபாமா இவர்களில் எந்த வகையைச் சேர்ந்தவர் என்பது இப்போது விளங்கும். சரி அதனால் நமக்கென்ன?

“All men are created equal, that they are endowed by their Creator with certain unalienable Rights, that among these are Life, Liberty and the pursuit of Happiness”

“வாழ்வு, சுதந்திரம், மகிழ்ச்சிக்கான நாட்டம் இது ஒவ்வொரு மனிதனுக்கும் படைக்கப்பட்டவனால் வழங்கப்பட்ட நியம உரிமைகளில் சில” என்று அமெரிக்க சாசனத்தில் குறிக்கப்பட்டிருக்கும் வாசகங்களையே அந்நியமாக்கும் முயற்சியையே ஒபாமா நிர்வாகம் செய்கிறது. அதிகாரத்தை விமர்சிக்கும் எல்லோரும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு விசாரணைகளின்றி இராணுவ நீதிமன்றங்களின் சிபார்சுகளோடு காலவரையின்றிச் சிறையிலடைக்கும் சட்டங்களைத் தீவிரமாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பது ஒபாமா நிர்வாகம். வெளிநாடுகளில் இள்ள பயங்கரவாதிகளை ஆளில்லா விமானங்கள் பலியெடுக்கவும் உள்நாட்டுப் பயங்கரவாதிகளைக் கைது செய்யும் அதிகாரங்களை இராணுவம் பொறுப்பெடுப்பதும் அமெரிக்க சாசனத்துக்குப் பொருந்த மாட்டாது. துரதிர்ஷ்ட வசமாக இவையெல்லாவற்றையும் நடைமுறைப்படுத்துவது ஒரு “முற்போக்கு” அரசு!

போர்கள் முடிவுக்குக் கொண்டுவருவது அமெரிக்க ஆயுத வியாபாரிகளுக்கும் உற்பத்தியாளருக்கும் பெரு நஷ்டத்தைக் கொடுக்கும். அதனால் இந்த வியாபாரிகளின் கவனம் இனி சிறிய வறிய நாடுகளை நோக்கியே இருக்கும். உற்பத்தியாளர்கள் தமது கருவிகளை ஆளில்லா விமானங்களின் தயாரிப்பிற்காக முடுக்கி விடுகிறார்கள். பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் தம் பங்கிற்கு ஆளில்லா விமானக் கொலைகளை லிபியாவில் நடத்தியிருக்கிறார்கள். இஸ்ரவேலின் வித்தியாரம்பம் இவ்விடயத்தில் சரஸ்வதி கடாட்சத்தோடு ஆரம்பித்திருக்கிறது.

புதியஉலக ஒழுங்கை நிலைநாட்டும் திட்டம் தீவிர வலதுசாரிகளால் முன்மொழியப்பட்டது. அதை மிக வேகமாக நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டுவது ஒபாமா.

“நண்பன் என்பவன் சந்தர்ப்பம் தேடியபடி கூடவே இருக்கும் எதிரியே” என்று இயக்குனர் சசிகுமார் கூறுவார். முன்னால் நின்று குத்தும் எதிரியைவிட பினால் இருந்து குத்தும் நண்பன் ஆபத்தானவனென்று அறிவதற்கு நாம் விஞ்ஞானிகளாகவிருக்க வேண்டுமென்பதில்லை.

ஒபாமா பின்னாலிருந்து குத்துபவர். அவர் சந்தர்ப்பம் தேடியபடி கூடவே இருக்கும் எதிரியே தான்.

அரசியல்வாதிகளால் முன்னெடுக் கப்படும் மாற்றங்கள் தற்காலிக மானவையே. நிரந்தரமான மாற்றங்களைத் தீர்மானிப்பதும் நடைமுறைப் படுத்துவதும் இயற்கையின் கைகளில் தானுண்டு. அது சான்டியாகவிருந்தாலென்ன நீலமாகவிருந்தலென்ன!

றொம்னி தோற்றாலும் பரவாயில்லை ஒபாமா வெற்றியடையக்கூடாது!

# ஐக்கிய அமெரிக்காவின் அடுத்த அத்தியாயம்

அடுத்தவார பூபாளம் பத்திரிகை பிரசுரமாவதற்குள் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி ஒபாமாவா அல்லது மிட் ரொம்னியா என்ற கேள்விக்கான பதில் கிடைத்திருக்கும். ஐக்கிய அமெரிக்காவின் அடுத்த அத்தியாயம் ஒபாமாவின் தொடர் கதையா அல்லது மிட் ரொம்னியின் புதுக்கதையா என்பதும் தெரிந்து விடும். ரொம்னியின் கதைதான் அங்கு புதிதாக ஆரம்பம் என தேர்தல் முடிவுகள் இருந்தாலும் கூட ஆச்சரியப்பட முடியாது.

பொதுவாக ஜனநாயக அரசியல் அமைப்பினை கொண்டிருக்கும் நாடுகளின் தலைமைகளை தெரிவு செய்வதற்காக நடைபெறும் தேர்தல் களில் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை பெறுபவர் அல்லது கட்சியை சார்ந்த ஒருவரே ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி போன்ற உயர் பதவிகளில் நாட்டினை ஆளும் தகுதியை அடைவர். ஆனால் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் அதிகளவில் மக்கள் ஆதரவு வாக்குகளை பெறுபவர்கள் நிச்சயமாக ஜனாதிபதி பதிவியை அடைய வேண்டிய அவசியம் இல்லை எனும் வகையிலேயே அந்நாட்டின் அரசியல் அமைப்பு காணப்படுகின்றது. 2000ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட ஜோர்ஜ் புஷ்ஷினை விடவும் தோல்வியுற்ற அல் கோர் அதிகப்படியான மக்கள் ஆதரவு வாக்குகளை பெற்றிருந்தமையை நாம் இங்கு ஞாபகத்தில் கொள்ளலாம்.

## பரம்ஜி பார்வையில்

பராக் ஒபாமா 2008ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட வேளையில் ஜக்கிய அமெரிக்கா இரு நாடுகளில் நடாத்தி கொண்டிருந்த போர்களினாலும், அந்நாடு ஒரு வல்லரசாவதற்கு காரணமாக இருந்த முதலாளித்துவ சித்தாந்த பொருளாதார அமைப்பை தமக்கு சாதகமாக்கிய பேராசைப் பணமுதலைகள், வங்கிகள் பங்கு சந்தைகளில் சூறையாடிய செல்வங்கள் காரணமாக சிதைந்து கொண்டிருந்த நாட்டு பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும், மற்றய நாடுகளில் அமெரிக்கா பெற்று வைத்திருந்த போர் வெறியர்கள் என்ற அவப்பெயரினை போக்கவும் வேண்டிய தேவைகளும் இருந்ததனால் ஒரு பாரிய மாற்றம் வேண்டி முதலாவதும் கடைசியுமான, இது பரம் ஜியின் கணிப்பு, கருப்பின அமெரிக்க அதிபர் பதவியை ஒபாமா பெறக்கூடியதாக இருந்தது. ஒபாமா கருப்பினத்தவர் என சொல்லப் பட்டாலும் அவரது தாயார் வெள்ளை இனத்தவராக இருந்தமையே அவரது வெற்றிக்கு காரணமெனலாம்.

அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா கொடுத்திருந்த தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான, அந்நாட்டின் பணக்கார வர்க்கம் மட்டும் அனுபவித்து வந்த வைத்திய வசதிகளை ஏழைகளும் பெற்றுக்கொள்ளும் வகையில் ஒழுங்கு செய்யும் சட்டத்தை அமைக்கப்பாடு பட்டமையே மேல்தட்டுவர்க்க பெரும்பான்மை வெள்ளையர்களின் வெறுப்பினை சம்பாதிக்க முதல் காரணமாக இருந்தது. அனைவருக்கும் வைத்திய வசதிகள் கிடைக்கும் பட்சத்தில் தாம் முன்பு சுதந்திரமாக அனுபவித்து வந்த வைத்திய வசதிகளை இப்போது ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைகள் உருவாகி விடும் என்பதுதான் காரணம்.

தமது நாட்டு மக்களுக்காக உருவாக்கப்படும் தொழில்களை நாளுக்கு நாள் பொருளாதார புகலிடம் தேடி ஆயிரக்கணக்கில் மெக்சிக்கோ மற்றும் கியூபா போன்ற நாடுகளில் இருந்து வந்து குடியேறும் சட்டவிரோத குடியேற்ற வாசிகள் எடுத்துக்கொள்வதாலேயே அமெரிக்காவில் வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்து ஆடுவதாகவும் அதனால் அப்படிப்பட்ட குடிவரவாளர்களை உடனடியாக பிடித்து நாடுகடத்த வேண்டும் என்பவை போன்ற பெரும்பான்மை மேல்தட்டு வர்க்க வெள்ளையினத்தவரின் கோரிக்கைகளுக்கு செவி சாயாமல் மாறாக புதிய குடிவரவாளர்கள் தகுந்த பாதுகாப்புடன் முறையாக அமெரிக்க குடியுரிமை பெற்று வாழும் வகையில் ஆவன செய்யப்படவேண்டும் எனும் வகையில் கருப்பர் ஒபாமா காரியங்கள் ஆற்றுவதும் வெள்ளையர்களின் வெறுப்பினை சம்பாதிக்கும் இன்னொரு காரணம்.

வெள்ளை இன கிறிஸ்தவர்களே உண்மையான அமெரிக்கர்கள், மனித இனத்தில்சிறப்பானபிறவிகள். அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகளுக்கு ஏற்ற வகைகளிலேயே சட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். அவர்கள் பாவச்செயல்களாக கருதும் மனித கருக்கலைப்புகள், அது எந்நிலையில் உருவாகினாலும், உதாரணமாக ஒரு பெண் பலவந்தமாக கற்பழிக்கப் பட்டதன் விளைவாக கருவுற்றாலும் கூட, அதனை இறைவனின் சிருஷ்டிப்பாக எடுத்து கொள்ளப்பட வேண்டுமேயன்றி கருக்கலைப்பு செய்யப்பட கூடாது. அப்படி செய்ய ப்படுமானால் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக சட்டமமைத்தல் வேண்டும் எனபதும் இவர்களின் ஒரு எதிர்பார்ப்பு. அப்படியான துர்ரதிஸ்ட்ட நிகழ்வுகள் வசதிகள் படைத்த தமக்கு கிடைக்கப்போவது இல்லை எனும் நப்பாசை நப்பிக்கை அது.

நாம் நம்பிக்கை வைத்துள்ள கிறிஸ்தவ மதக்கோட்பாடுகளின் படி மனிதவர்க்கத்தில் மிக மோசமான பிறவிகள் ஓரினச் சேர்க்கையாளர்கள். இவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்கள். சமூகங்களில் பொதுவானதும் இயல்பானதுமாக கருதப்படும் எதிர்பால் சேர்க்கை திருமணங்கள் அங்கீகரிக்கப்படுவது போல ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணங்களும் அரசினால் ஏற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பவை போன்ற கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் வகையில் சட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதுவும் பெரும்

16ம் பக்கம்..



# நிலைத்த வடு நீங்க வழியேற்படுமா? ஆறாத வடுவை ஏற்படுத்திய அந்த நாட்கள் வரலாற்றில் பதியப்படுமா?



இரண்டு தசாப்தம் கடந்து போயாகி விட்டது. பல தசாப்தம் கூடிக் குலாவி, இணைந்துபிணைந்துவாழ்ந்த மக்களை வலுக்கட்டாயமாக விரட்டியடித்த வடு இன்னும் நீங்கவில்லை. இவ் வடுவை ஏற்படுத்தியவர்களும் அழிந்து போய்விட்டனர்.

ஆனால் வடுகள்தான் நீங்கவில்லை. இந்த மக்களின் வாழ்விற்கு இன்னும் விடையும் கிடைக்கவில்லை, விடிவும் கிடைக்கவில்லை. இந்த மக்களின் வாழ்வு செழுமையடைய எதிர்காலத்தில் வாய்ப்புக்கள் ஏற்படுமா?

1990ம் அன்டு ஒக்ரோபர் மாதம் கடைசிக் கிழமை வட புலத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மக்களின் ஒரு காலைப் பொழுது அபாயச் சங்கு ஊதியது போன்ற அறிவிப்புடன்தான் விடிந்தது. "48 மணி நேர அவகாசம் வழங்குகின்றோம் வட புலத்தை விட்டு வெளியேற வேண்டும். வெறும் 2000 ரூபாய், 1 சவரன் நகை. 5 பெட்களில் உடு துணிமணிகள் மட்டும் குடும்பம் ஒன்றிற்கு எடுத்துச் செல்லாம், வெளியேற முன்பு எங்கள் முகாம்களில் நீங்கள் பதிவு செய்தல் வேண்டும்." இது தான் அந்த அபாயச் சங்கொலி ஊதிய செய்தி. யாழ்பாணத்தில் வாழ்ந்த முஸ்லீம் மக்கள் யாழ் ஒஸ்மானியா கல்லூரிக்கு அழைக்கப்பட்டு வெறும் 2 மணி நேர அவகாசத்தில் வெறியேறுமாறு கட்டளையிடப்பட்டனர். இச் செய்திகள் வட புலத்தில் வாழ்ந்த முஸ்லீம் சகோதரர்களை மட்டும் அல்ல அவர்களுடன் சகோரத்துவத்துடன் வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்கும் பேரிடிச் செய்தியாகவே ஒலித்தது. இந்த துரத்தியடித்தல் செயற்பாட்டில் எந்த தமிழ் பொது மக்களும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

துரத்திய அடித்தலின் போது வட புலத்தின் இறுதி சோதனைச் சாவடியில் மேலதிகமாக? முஸ்லீம் மக்களால் எடுத்துச் செல்லப்பட்ட தங்களது நகைகள் பெண்களின் கழுத்திலிருந்து கழட்டி எடுக்கப்பட்டன. பொருட்கள் பறித் தெடுகப்பட்டன. கூடவே நீங்கள் சம்பாதித்த சொத்துக்கள் எங்களுடையது என்ற வசை வேறு பாடி அனுப்பப்பட்டனர். பெரும் பாலும் கால் நடையாக உணவு உறக்கம் ஓய்வின்றி துரத்தபபட்ட வரலாற்றைக் கொண்டதே இந்த வடு நிகழ்வு ஆகும்.

அன்று இலங்கையில் பதவியில் இருந்த அரசும் இச்செயற்பாட்டை கட்டுப்படுத்தும் பொறி முறைகளை அப்போது கொண்டிருக்கவில்லை. இன்னொருவகையில்இதனை ஒருவகையில் தனக்கு சாதமாக பயன்படுத்தலாம் என்ற கணக்குகளையும் போட்டுக் கொண்டு இருந்தது.

இந்த பல்லாயிரம் மக்களை அன்புக் கரம் நீட்டி அரவணைத்து ஆறுதலாக வும் உறு துணையாகவும் செயற்பட்டது புத்தளம் வாழ் மக்களே. புத்தளம் வாழ் முஸ்லீம் சமூக மக்களே பாரியளவில் இச் செயற்பாட்டடை செய்தாலும் புத்தளத்தில் வாழும் மூவின மக்களும் ஏதோ ஒரு வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த அகதி மக்களை 22 வருடங்களாக ஆதரவளித்து வருகின்றனர் என்பதுதான் வரலாற்று உண்மை.

இந்த மக்களில் பலர் அகதி முகாம் வாழிவிற்குள் வாழ்ந்தாலும் இந்த 22 வருடங்களில் தங்களின் பாரம்பரிய வாழ்விடங்களின் வாழ்வுச் சுடர்களை மனத்தில் நிலை நிறுத்திக் கொண்டு புலம் பெயர்ந்து வாழ்ந்த இடத்தில் தமக்கான வாழ்வுகளை உறுத்திப்படுத்துவதற்கான தேடல்களில் ஈடபட்டனர் என்பதே உண்மை நிலை.

இம் மக்களே இலங்கை வரலாற்றில் பாரியளவில் அகதிகளாக அடித்து விரட்டப்பட்ட மக்கள் என்று கூறலாம். ஒரே மொழியை பேசும் இன்னொரு சிறுபான்மை மக்களின் விடிவிற்கான போராடப் புறப்பட்டவர்களினால் துரத்தியடிக்கப்பட்ட இந்த மக்களுக்க ஆதரவாக வட புலத்து தமிழ் சிவில் சமூகம் வீதியில் இறங்கி போராட முடியவில்லை. தடுத்து நிறுத் முடியவில்லை. பலர் தங்கள் மனதிற்குள் அழுது கொண்டே இருந்தனர் பரம்பரை பரம்பரையாக சகோதரர்களாக வாழ்ந்த இந்த மக்களை வலுக் கட்டாயமா பிரித்தெடுத்த பெருமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று வரை உள சுத்தியுடன் வருந்தியதாக அறிய முடிவில்லை. கூடவே இது நியாயமானது என்று பிரச்சாரப்படுதப்பட்டதினால் ஏற்பட்ட தவறுதலான புரிதலின் அடிப்படையில் இவர்களின் ஆதரவாளர்கள் இன்றுவரை தம்மை உள்ள படுத்தியருப்பது இன்று வரை வருந்தத் தக்கது, கண்டிக்க தக்கது.

இவ் வடு நிகழ்வை ஏற்படுத்திய போது பயத்தின் காரணமாக வாய் மூடி மௌனித்து இருந்தவர்களும் இதற்கான பொறுப்பை ஏற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இருதரப்பு பாராளுமன்ற அரசியல்வாதிகளும் இந்த பிரித்தாளும் செயற்பாட்டில் குளிர்காய்ந்து பிளவுகளை மேலும் உறுதிப்படுத்தவே முயன்று தமது வாக்கு வங்கிகளை உறுதிப்படுத்திக் கொண்டனர். இது அண்மைய தேர்தல் உள்பட பல தேர்தல்களிலும் வெளிப்பட்டது. ஆனால் சாதாரண தமிழ் முஸ்லீம் மக்களிடையே என்றும், இன்றும் சகோரத்துவமும், பாசமும், ஐக்கியமும் நிலவியே வருகின்றது. பேரினவாதமும் சிறுபான்மை இனங்களிடையேயான இந்த பிளவை எண்ணை ஊத்தி வளர்த்தனர். புனிதமான மக்களின் மத உணர்வுகளை வெறியாக்கி ஜிகாத் என்றும் தூய்மை என்றும் பாகம் போட்டு மனித உணர்களை பள்ளியிலும் பான்சாலையிலும் ஏன் இந்து மதக் கோவில்களிலும் தேவாலயங்களிலும் பங்கு போட்ட சோக நிகழ்வுகளே அதிகம் நிகழ்ந்தன. இவற்றை தடுத்து நிறுத்தும் பலமான தலைமைகள் எங்கும் அன்று இருக்கவில்லை. மனிதக் குலத்திற்கு விரோதமான வெட்கித் தலைகுனியும் இச் செயற்பாட்டை கண்டித்தும் போராட்டங்களில் ஈடுபட்ட அமைப்புக்கள் இல்லாமல் இல்லை. தனி நபர்களும் இல்லாமல் இல்லை. புத்தி ஜீவிகளும் இல்லாமல் இல்லை. இவரகளின் குரல் எல்லாம் குறும் தேசியவாதத்தின் பெயராலும், தனிநாடு, தனி ஈழம் என்ற பெயராலும் துரோகங்கள் ஆக்கப்பட்டதே வரலாறு.

ஆனாலும் இவர்கள் என்றும் ஒய்து விடவில்லை ஆனால் 22 வருடங்களாக சுமார் முக்கால் இலட்சத்திற்கு மேற்பட்டோர் தமது சொந்த வீடுகளில் இருந்து விரட்டப்பட்ட நிலையில் அகதி வாழ்வில் இரண்டு தசாப்தம் கடந்த நிலையில் இவ் முக்கால் இலட்சம் இன்னும் பெருகி ஒரு இலட்சத்தை தாண்டியிருக்கின்றது. இதில் அகதி முகாமில் பிறந்து அகதிகளாகவே வாழும் அவலம் பல குழந்தைகளுக்கு. இவர்களுக்கு தமது தந்தையர் பூமியின் பெருமை தெரிய வாய்ப்புக்கள் இல்லாமலே போய்விட்டது. ஆனால் எந்தையும் தாயும் கூடி மகிழ்ந்த நன் நாடு என்று அல்லாவை நினைத்து 5 வேளை தொழுகையில் ஈடுபடும் அந்த அகதி முதியவர்களின் கனவுகள் இளமைக்கால நினைவுகள் கொல்லாமல் அவர்களைக் கொன்று கொண்டே இருக்கின்றன. 2009ம் ஆண்டு போரிற்க பின்னரான இந்த மக்களின் உணர்வலைகள் பல பத்திரிகை செய்திகளாக கட்டுரைகளாக இதனையே பறைசாற்றி நிற்கின்றன.

புலம் பெயர் தேசங்களில் எங்களில் பலர் எமது இளமைக்கால இனிமைகளை அசை மீட்டவண்ணம் நடைப் பிணங்களாக பஞ்சம் பிழைக்கும் தொழிலில் ஈடுபடுவது போன்ற உணர்வுகளுடன் இதனை நிச்சயம் ஒப்பிட்டு பார்க்கமுடியும். வெயிலிலும், பனியிலும் நிமிர முடியாத இயந்திர ஓட்டங்களிடையே நாமும் இயந்திரமாக சாகும் அவலங்களுக்கு புத்தளத்தில் 20 வருடங்களுக்கு மேலாக வாழும் மக்களின் வாழ்வு எந்த வகையிலும் துன்பியல் குறைந்தது அல்ல. இதை அனுபவித்து பார்த்தால் தெரியும், இது தமிழ் நாட்டு அகதிகள் முகாம்களிலும் தொடர்கின்றன. "எமக்கு நாடு இல்லை" என்று தனி நாடு கோரிப்புறப்பட்டவர்கள் செய்த வடுக்கள் இவை. "உனக்க நாடு இல்லை" என்று கூறியவர்கள் செய்த வடுகள் தமிழ் நாட்டு அகதிகளும், புலம்பெயர் தேசத்து அகதிகள் பலரும். இதில் சிலர் முதல் வகையைச் சேர்ந்தவர்களும் அடக்கம்.

தமிழீழவிடுதலைப்புலிகள்மேற்கொண்ட இந்த வடுவிற்கு வாய்மூடி ஒரு வகையில் அங்கீகாரம் வழங்கியவர்கள் இன்று தமிழ் தேசியம் கூறி ஏக பிரதிநிதிகளாக கிழக்கிலும் வடக்கிலும் தன்னாட்சி நிறுவுவதாக சூழுரைக்கின்றனர். மீண்டும் ஒரு முள்ளிவாய்காலை காண முயல்கின்றனர். குழல் பிட்டுவில் தேங்காயும் மாவுமாக பின்னி பிணைந்து கலந்து சுவை தந்த உறவுகளை பள்ளிவாசல் கொலைகள் இல்லாமல் செய்து விட்டது என்பதில் சில பல சோகங்கள் இல்லாமல் இல்லை. ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டங்களில் சிறப்பாக 1970 களின் பிற்பகுதி தொடங்கி 1980 களின் நடுப்பகுதிவரை சகல ஈழவிடுதலை அமைப்புக்களிலும் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லீம் இளைஞர்களும் பங்களிப்பை செய்தே வந்தனர். முஸ்லீம் மக்களும் போராளிகளின் பாதுகாப்பிற்காக தமது படுக்கையறையைக் கூட ஒழிவிடமாக பாவித்து போராளிகளை மறைத்து காத்த மாண்புகளை எங்கள் முஸ்லீம் சகோதரிகள், தாய்மார்கள் செய்த வரலாறுகளைக் கொண்டதே ஈழவிடுதலை வரலாறு.

> **ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டங்களில் சிறப்பாக 1970 களின் பிற்பகுதி தொடங்கி 1980 களின் நடுப்பகுதிவரை சகல ஈழவிடுதலை அமைப்புக்களிலும் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லீம் இளைஞர்களும் பங்களிப்பை செய்தே வந்தனர். முஸ்லீம் மக்களும் போராளிகளின் பாதுகாப்பிற்காக தமது படுக்கையறையைக் கூட ஒழிவிடமாக பாவித்து போரா-ளிகளை மறைத்து காத்த மாண்புகளை எங்கள் முஸ்லீம் சகோ தரிகள், தாய்மார்கள் செய்த வரலாறுகளைக் கொண்டதே ஈழவிடுதலை வரலாறு. இவ் அனுபவங்கள் எங்கள் பலருக்கும் உண்டு.**

**சிவா ஈஸ்வரமூர்த்தி**

தொடரும்...

# வாழ்வின் துண்டங்கள் சொல்லும் வரலாறு

**அழகேந்தி**

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து 'அடையாளம்' சாதிக் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அங்கே வந்தவர், 'வன்னிக்கு வரலாமா?' என்று கேட்டார். 'வரலாம்' என்றேன். மறுநாள் காலையில் எழுத்தாளர் கே. டானியலின் மகன் சாம் மற்றும் சாமின் மனைவி, பிள்ளைகளுடன் வன்னிக்கு வந்திருந்தார். இருவரைப்பற்றியும் ஏற்கனவே அறிந்திருக்கிறேன். ஷோபா சக்தியின் கொரில்லா தொடக்கம் சோலைக்கிளியின் மொத்தக் கவிதைகள் வரையில் ஈழம் தொடர்பான பல புத்தகங்களை பதித்து வெளியிட்டவர் சாதிக். உலக தத்துவங்களைப் பற்றிய எளிய பதிப்புகளை ஒரு தொடராக – நல்ல கட்டமைப்பில் வெளிக்கொண்டு வந்தவர். இன்னும் ஏராளமான நல்ல புத்தகங்களை அடையாளம் பதித்திருக்கிறது. தமிழகத்தின் முக்கியமான பத்துப் பதிப்பகங்களில் அடையாளம் ஒன்று. ஆனால், சாதிக்கைச் சந்திப்பது இதுதான் முதற் தடவை. சாமையும் முன்னர் சந்தித்ததில்லை. அன்றுதான் நேரிற் பார்க்கிறேன். சாமும் புத்தகங்களை எழுதி வெளியிடுகிறார். ஆனால், இலக்கியமல்ல. கல்வி சார்ந்த புத்தகங்கள். கணக்கியல் உயர் வகுப்புகளுக்கான புத்தகங்கள், பயிற்சி ஏடுகள். ஒவ்வொன்றும் பல பதிப்புகள். தனித்தனியாகப் பல வெளியீடுகள். இருபது ஆண்டுகளாக இந்தத்துறையில் வடபகுதியில் சாம் ஒரு முக்கியமான புள்ளி. என்னுடைய மகன்கூட சாமின் புத்தகங்களை வாங்கிப் படித்திருக்கிறான். அந்த வகையில் என்னைவிட மகனுக்குச் சாமை நன்றாகத் தெரியும். யாழ்ப்பாண நகரிலுள்ள ஆரியகுளத்துக்கு அண்மையில் இருக்கிறது சாமின் புகழ்பெற்ற தனியார் கல்வி நிலையம். அங்கே ஏறக்குறைய 1200 உயர்வகுப்பு மாணவர்கள் படிக்கிறார்கள். சாம் சொன்னார், அப்பா (கே. டானியல்) ஒரு புத்தகத்தைப் பதித்து வெளியிட எவ்வளவோ கஸ்ரப்பட்டார். ஆனால், நான் பதிக்க முன்னரே ஓடர்கள் வரத் தொடங்கி விடும். ஒவ்வொரு பதிப்புக்கும் ஏகக் கிராக்கி. ஆனால், அப்பாவைப் போல ஒரு கதை என்னால் எழுத முடியாது. அவரைச் சொல்லித்தான் என்னை இன்னும் அடையாளப்படுத்து கிறார்கள். இதுதான் அப்பாவுக்கும் எனக்கும் இடையிலுள்ள வித்தியாசம்' என்று, சிரித்துக் கொண்டே. சாம் சொல்வது உண்மையான நிலையே. ஆனால், இது இப்ப யாருக்காகச் சொல்லப்படுகிறது? எதற்காகச் சொல்லப்படுகிறது என்று ஒரு கணம் சிந்தித்தேன். டானியல் எழுதியதைப் பதிக்கச் சிரமப்பட்டதைப் போல, பதிப்புத் துறையில் சிரமங்களோடு மல்லாடிக் கொண்டிருக்கிறார் சாதிக். சாதிக்கை விட இலகுவாகவே – வெற்றிகமாகத் தன்னுடைய புத்தகங்களைப் பதித்து வெளியிட்டுக்கொண்டிருக்கிறார் சாம். தந்தை சிரமப்பட்டதைப் போல அல்லாமல், தான் எழுதும் புத்தகங்களை இலகுவாகப் பதித்து வெளியிடுகிறேன் என்று டானியலுக்காக சாம் இதைச் சொன்னாரா அல்லது சாதிக்குக்காகச் சொன்னாரா என்று தெரியவில்லை. அல்லது எதைப் பற்றியும் யோசிக்காமல் தன்னுடைய மனதில் பட்ட உண்மையைத்தான் சொன்னாரா? ஒன்றையும் சரியாக மதிப்பிட முடியவில்லை. ஆனால், சாம் சொன்னதைப் புறக்கணிக்க முடியாது. அதைப்பற்றிச் சிந்திக்காமலிருக்கவும் முடியவில்லை. காலை ஒன்பது மணியளவில் பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவுக்குப் போகும் சாலையில் பயணித்தோம். முல்லைத்தீவுப் பட்டினத்தையும் விட இப்பொழுது முக்கியமாக மாறியிருப்பது, பிரசித்தமாகியிருப்பது அங்கேயிருக்கிற முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு போன்ற இடங்கள். இங்கேதான் இறுதிப் போர் நடந்தது. இங்கேதான் ஈழப்போரின் வரலாற்றுத் தடங்கள், வியப்பூட்டும் ஆச்சரியங்கள் எல்லாம் உள்ளன. குறிப்பாகப் புலிகளின் அடையாளங்களை இந்தப் பகுதிகளிற் காணமுடியும்.

இந்த இடங்களைப் பார்ப்பதற்காக தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் வருகிறார்கள். அதிலும் கூடிய ஆர்வத்தோடு வருவது சிங்கள மக்களே. அவர்களுக்குத்தான் இந்த இடங்களைப் பற்றிய இன்னொரு பக்கக் கதைகள் தெரியும். புலிகளுடனான யுத்தத்தில், என்ன நடந்தது என்று போரில் ஈடுபட்ட இன்னொரு தரப்பான படையினர் அவர்களுக்கு அவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். எங்கே எங்கே என்ன என்ன மாதிரியெல்லாம் யுத்தம் நடந்தது? எங்கே எங்கே என்னவெல்லாம் இருக்கின்றன? புலிகள் எப்படி இருந்திருக்கிறார்கள்? என்றெல்லாம் அவர்கள் கதைகளாக அறிந்தவற்றை நேரிற் பார்ப்பதற்காக இங்கே வருகிறார்கள். இது ஒரு துயரமும் சுவாரஷ்யமும் நிறைந்த முரண் நிலை உண்மை. போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு படையினர். சிங்களப் படையினர். இந்தப் படையினரின் உறவினர் அத்தனைபேரும் சிங்களவர். இதேவேளை போரின் அடுத்த பக்கத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் புலிகள். அதாவது, அவ்வளவு பேரும் தமிழர்கள். ஆகவே வருகின்ற சிங்கள மக்களை இன்னும் படையினரின் நிழலாகவே தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் பார்க்கின்றனர். அதைப்போல தமிழ்சனங்களை இன்னும் புலிகளின் முகங்களாகப் பார்க்கிற ஒரு நிலையும் சிங்கள மக்களிடம் இருக்கிறது. இந்த இடைவெளியை நீக்குகிற காரியங்கள் எதுவும் நடக்கவில்லை. போரிலே பாதிக்கப்பட்டிருக்கிற தமிழர்களுக்கு சிறிய அளவிலான உதவிகளையும் அரவணைப்பையும் செய்யக் கூடிய ஏற்பாடுகளைச் செய்திருந்தால் ஒரு நெருக்கம் இரண்டு தரப்பிற்கும் இடையில் ஏற்பட்டிருக்கும். ஆனால், அப்படி எதுவும் நடக்கவேயில்லை. இதைப் பற்றிய சிந்தனைகள் கூட யாருக்கும் வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இடைவெளி அப்படியேதான் பகைஉணர்வோட்டத்தோடிருக்கிறது. இதனால் போரிலே தோற்கடிக்கப்பட்ட தங்களை வேடிக்கை பார்ப்பதற்காகச் சிங்களச் சனங்கள் வருகிறார்கள் என்று தமிழர்கள் நினைக்கிறார்கள். சாதிக், போரின் இறுதி நாட்களில் சனங்கள் இருந்த இடங்களை, வாழ்ந்த இடங்களை, வாழத்துடித்த இடங்களைப் பார்க்க விரும்பினார். முன்னர், போர் நடந்த வேளையில், ஊடகங்களின் வழியாக அவர் கேள்விப்பட்ட இடங்களை, செய்திகள் அவருடைய இரத்தத்தையும் மனதையும் உறைய வைத்த இடங்களைப் பார்க்கத் துடித்தார். எங்களுடைய வண்டி, கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பரந்தனிலிருந்து உள்ளே செல்லச் செல்லக் காட்சிகள் மாறின. வயலும் கிராமங்களின் குடியிருப்புகளுமாக இடங்கள் வந்து கொண்டிருந்தன. தருமபுரத்துக்குச் சென்றபோது போரின் அடையாளங்கள் துலக்கமாகத் தெரியத் தொடங்கியது. போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகி விட்டன. இதற்குள் மூன்று மாரியும் மூன்று கோடையும் கழிந்து விட்டன. ஆனால், இன்னும் போரின் எச்சங்களும் அடையாளங்களும் மறைந்து விடவில்லை. அங்கும் இங்குமாகச் சிதறிக்கிடக்கும் இடிபாடுகளும் வாகனங்களின் அழிவுகளும் இன்னும் புழுதியினால் மூடியிருக்கும் தெருக்களும் குடிசைகளும் அங்கே திரிகின்ற சனங்களின் வாடிச் சோம்பிய முகங்களும் அது போர்ப்பூமியே என்று தெளிவாகக் காட்டின. 'இதெல்லாம் என்ன?' என்று சிதைந்த நிலையில் குவிக்கப்பட்டிருந்த வாகனங்களைக் காட்டிச் கேட்டார் சாதிக். சாம் குடும்பத்துக்கும் இதெல்லாம் புதிதே. யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் அவர்களும் இதுவரை வன்னிக்கு வந்ததில்லை. கொழும்புக்குப் போகும்போது சாலையின் இரண்டு பக்கமும் கிளிநொச்சியையும் வன்னியையும் பார்ப்பதுடன் நின்று விட்டனரர். அதற்கப்பால் அவர்கள் அறிந்து வைத்திருப்பதெல்லாம் ஊடகச் செய்திகளையும் வாய்வழிக் கதைகளையுந்தான். ஆகவே சாதிக்கைப் போலவே எல்லாவற்றையும் அறியும் ஆவலோடு பதிலை எதிர்பார்த்தனர். 'இதெல்லாம் சனங்களின் இரத்தம். அவர்களுடைய வியர்வை. அவர்களுடைய வாழ்க்கை. அவர்களுடைய எதிர்காலம்' என்றேன். 'யுத்த நாட்களில் சனங்கள் தங்களின் பொருட்களையெல்லாம் காவிக் கொண்டே இடம்பெயர்ந்தார்கள். ஒவ்வொரு இடமாக வைத்து, வைத்துக் காவிக்கொண்டு வந்தவர்களை யுத்தம் கலைக்கத் தொடங்கியது. அப்பொழுது இவற்றையெல்லாம் கைவிட்டுச் சென்றார்கள். அதைத் தவிர, அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. அப்படிக் கைவிட்டுச் சென்றவை அழிந்தவையும் இப்படி எஞ்சியவையுமாக மிஞ்சியிருக்கின்றன. இதிலும் எடுக்கக் கூடிய எல்லாவற்றையும் படையினர் எடுத்து விட்டனர். மிஞ்சியவற்றை தென்பகுதியின் முறையற்ற வியாபாரிகள் பிடுங்கிச் சென்று விட்டார்கள். அதிலும் மிஞ்சியவற்றை தமிழ்த்தரப்பிலுள்ள சுழியன்கள் கழற்றி விட்டனர். எல்லாத்துக்குப் பிறகும் மிஞ்சிய கழிவுகளே இவை' என்றேன். துக்கம் நெஞ்சை அடைத்தது. பழைய நினைவுகள்

16ம் பக்கம்...


**மிக முக்கியமானதும் முன்னுரிமையானதும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பே...**

Individual Life Insurance, Mortgage Insurance, Disability Insurance, Critical Insurance, Non-Medical Insurance, Travel Insurance

Registered Education Saving Plan (RESP)
Registered Saving Plan (RRSP)

Call
**Ravi Ponnudurai**
**(Insurance Advisor)**
**Direct: 647-868-6475**

*Even During Tough Times, Life Insurance Offers Peace of Mind*

Get the right
Super Visa Insurance
best suited for your needs!




Super VISA


MEGA Financial Group
PH28 - 4168 Finch Aveune. E.
Scarborough, ON
M1S 5H6
Bus: 416-293 5559
Fax: 416-293 9409
www.megafinancial.ca

# நீங்கள் அதிக வட்டி செலுத்துபவரா...!

## இன்றைய அதிகுறைவான வட்டி வீதத்தில் Mortgage பெற்றிட, என்னை நாடுங்கள் - *Senthil Varatharajah*

### Finch / Staines



**$519,000**
**5 Bedroom, 3 Washroom**
Gleming Hardwood Flooring Thru Out The House. Master Bedroom With Ensuite Washroom, And Walk In Closet. 3rd Bedroom Also With Walk-In Closet. Close To All Amenities.


### Steeles / Staines



**$635,000**
**4 Bedroom, 3 Washroom**
Approx $$$70K Extras! Backsplash, Maple Spindles Staircase.Gas Fireplace, Deck, Over 9' High Ceilings In Bsmt.! Fenced Yard Close To All Amenities: Shopping, Schools, Golf, ttc


### Steeles / Staines



**$524,000**
**3+1 Bedroom, 4 Washroom**
Sep Entrance.Lot Size 44X113 Ft.Extra Income Property.,2nd Flr New Hardwood,Oak Staircase,Direct Access To Garage New Attic Insulation.Ttc & School.Close To All amenities

### Markham/Steeles



**$539,000**
**4+1 Bedroom, 4 Washroom**
Spacious Eat-In-Kitchen, Master 5 Pc Ensuite, Open Concept Family Room, And Kitchen. Close To All Highways, Schools, Shopping And All Amenities, and more...


### Markham / Denison



**$549,000**
**3+2 Bedroom, 4 Washroom**
No Carpeting Except On The Staircase. Kitchen W/Granite C/T + B/S. Beautifully Landscapped Backyard. Finished Basement With Two Bdrms. It Was Rented Out For $850/Month.


### Denison/Middlefield



**$567,000**
**4+2 Bedroom, 4 Washroom**
Fresh Paint,Granite Kitchen Countertop & Backsplash, Extra Cabinets,Huge Deck & Garden Shed In Fenced Backyard,Double Garage, Basement With Separate Walk-Up Entrance.

### Middlefield/Elson



**$565,000**
**4+2 Bedroom, 4 Washroom**
Walk To T-T-C & School Note Upgrades & Updates: Kitchen, Roof, Eavestrough, Furnace, Cac, Some Windows, Pot Lights, Broadloom, All Toilets(Ex: Bsmt), Driveway.


### Middlefield/Highglen



**$599,000**
**4 Bedroom, 3 Washroom**
9' Ceiling On The Main Floor,Family Room With Gas Fireplace, Walk To High School & Public School. Driveway With 4 Car Parking Spaces, Close To Park.


### Denison/Middlefield




**$599,000**
**4+2 Bedroom, 4 Washroom**
Brand New Custom Kitchen ** Brand New Hardwood Floors ** Landscapped Backyard ** Shows Pride Of Ownership ** Sellers Prefer Long Closing **

### Rossland/Audley




**$419,000**
**4 Bedroom, 3 Washroom**
9Ft Ceiling, Hdwd On Main, Laminate On 2nd. Oak Staircase, Freshly Painted, New Backsplash & Counter Top In Kitch. Reno'd Ashfall Driveway, Entrance Thru Garage, amenties...

### Rossland / Salem




**$435,000**
**3 Bedroom, 3 Washroom**
Featuring Hardwood & Ceramics Floors. Gas Fireplace. Door From The House To Garage. 3 Large Edrooms. 3 Bathrooms.(4Pc. Ensuite W/Stall Shower & Oval Bath Tub.)All 5 Appliances. Alarm Syst. Central Vaccum & Central Air Cond. Maple Kitchen Cabinets...

### Ravenscroft /Williamson



**$447,000**
**4+1 Bedroom, 3 Washroom**
Separate Entrance To Basement,Features Hardwood In Lr/Dr/Family Rm! Upgraded Kitchen With Ceramic B/Splash+B/I Dishwasher!Basement Completed With Sep Entrance, Kitchen, Bedrm+Full Washrm.This Home Is Equipped With Security Camera!

### Westney/Taunton



**$479,000**
**4 Bedroom, 3 Washroom**
Crown Moulding & Pot Lights Throughout The Main Floor, Custom Backsplash *Soaker Tub & Sep.Shower In Master Ensuite *9' Ceil's *Hardwood Floors, Stairs & Nosing *Iron Pickets *Smooth Ceil's *200 Amp Panel *$$thousands Spent In Upgrades

### Staines/Steeles



**$689,000**
**5 Bedroom, 4 Washroom**
3000 Sq Ft With 5 Principal Bedrooms & 5 Baths*Majestically Positioned On 100X45.97 Ft Corner Lot*Splendid Elevation*Lush Green Lawns* New & Neutral Colour *Grand Double Door Entry, Granite Countertops* Skylight...

### Salem/Taunton



**$500,000**
**4 Bedroom, 3 Washroom**
2438 Sf, 40'Frontage, + 5'Conservation @ Back. Open Concept,Energy Plus! App 90K In Upgrades! Impressive Foyer,Prem Mirage Hardwd Thruout,Porcelain Tiles,Upgr Cabs/Undr Cab Lgtng,Granite C/Tops,Freshly Painted,Proff Landscpd.Walk To Schs,Golf,Amenities

**வீடு வாங்கவும் விற்கவும் அத்துடன் குறைந்த வட்டி வீதத்தில் Mortgage பெற்றிடவும் அழையுங்கள்**



# Senthil Varatharajah

*Broker*

**Dir: 416.846.5342**

RE/MAX Vision Realty Inc. BROKERAGE
Each Office Independently Owned and Operated

#1 RE/MAX Most Productive Agents in Canada

**www.senthilhome.com**

1-2210 Markham Road, Scarborough,ON M1B 5V6
Office: 416.321.2228, Sevaratharajah@trebnet.com

Design by 416-854-4309

This advertisement is not intended to solicit properties that are currently listed for sale. Error may occure, check with Senthil for correct info.
* Based on 2010 closed transactions. Source CREA and RE/MAX internal data

# கனடியப் பிரஜா உரிமை மாற்றங்கள் பற்றிய அறிவித்தல்!



செய்தி: கனடாவில் புதிய பிரஜைகள் தங்கள் வாழ்வில் வெற்றி பெற ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் கருத்துப் பரிமாறும் திறமையைக் கொண்டிருத்தல் அவசியம்.

**கனடா பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்க விரும்புகின்றீர்களா?**

விண்ணப்ப படிவம் நிரப்பி அனுப்ப உதவிகள் தேவைப்படுவோர் நாடவேண்டிய தொலைபேசி எண்

**416 269 5883**


என் எண்ணத்தில் இருந்து...

# புதிய திருமணத் தம்பதிகளின் துணைவர் பொறுப்பேற்றல் மாற்றங்கள்!

நமு பொன்னம்பலம்

மாறிவரும் குடிவரவுத் துறையில் மேலும் பல மாற்றங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த spousal sponsorship அதாவது திருமணத் தம்பதிகளின் துணைவர் பொறுப்பேற்றல் என்ற நடைமுறையில் பாரிய மாற்றங்களை குடிவரவு அமைச்சர் அறிவித்திருக்கின்றார். இதன்படி எதிர் காலத்தில் ”கட்டுப்பாடுடன் கூடிய நிரந்தர வசிப்பிட உரிமை” அதாவது ஆங்கிலத்தில் "conditional permanent residence " என்ற பதத்துடன் இத்திட்டம் அறிமுகமாகின்றது.

இதன்படி கனடாவிற்குள் துணைவர் பொறுப்பேற்றல் மூலம் பிரவேசிக்கும் துணைவரோ அல்லது துணைவியோ இந்த நாட்டில் இரு வருடங்களுக்கு தனது துணைவருடன் திருமணத் தம்பதிகளாக வாழும் இடத்தில் மட்டும் நிரந்தரமாக இந்த நாட்டில் தொடர்ந்து வாழ வழி கிடைக்கும். மாறாக இத் தம்பதிகளின் வாழ்வில் விரிசல்கள் ஏற்படும் பட்சத்தில் துணைவர் பொறுப்பேற்றல் ரத்துச் செய்யப்பட்டு நாடு கடத்தலை எதிர் நோக்கக் கூடும் அல்லது கனடாவை விட்டு தாயகத்திற்கு திரும்புமாறு பணிகப்படுவர்.

இத்திட்டத்தின் பின்னணியில் ஏற்கனவே நடைமுறையில் இருந்த துணைவர் பொறுப்பேற்றல் மூலம் கனடாவிற்குள் புதிதாக வந்தவர்கள் மூலம் ஏமாற்றப்பட்ட கனடியக் குடும்பங்களும் அதனைச் சார்ந்து உள்ளோரும் இதற்காக அரசிடம் அழுத்தங்களை பிரயோகித்திருந்தனர். இத் திட்டமானது கனடாவில் உள்ள துணைவரின் உரிமையை மேலும் பலமாக்குகின்ற போதிலும் புதிதாய் இந்த நாட்டினுள் பிரவேசிக்கின்ற ஒருவர் சந்திக்கக் கூடிய கலாச்சார மாற்றங்கள் மற்றும் புதிய சூழல் மூலம் ஏற்படுகின்ற மாற்றங்களை குறிப்பாக இந் நாட்டிற்குள் புகும் துணைவருக்குரிய உரிமையை மேலும் வலுவிழக்க வைக்கின்றது.

இதன் காரணமாக புதியதாய் கனடாவிற்குள் வருகின்ற துணைவர் இரு வருடங்களுக்குள் ஒத்துவராத துணைவரை விட்டுப் பிரியும் பட்சத்தில் இந்த நாட்டில் உள்ள உரிமைகளை குறிப்பாக கணவர் மனைவிக்குள் எழும் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு சம உரிமை உள்ளவர்களாக மதிகப்படுபவர்களாக இல்லாமல், சட்டம் புதிய நிரந்தர வசிப்பிட வாசியை கட்டுப்பாடுடன் கூடிய நிரந்தர வசிப்பிட உரிமை மூலம் ஒருவரது உரிமைகளை அடக்குவதாக அகதிகளுக்கான கனடிய அமைப்பு ஒன்று குறை கூறியுள்ளது.

இதே வேளையில் குடிவரவுத் துறையை சேர்ந்தோர் நியாயமான முடிவுகளை எடுக்கக் கூடிய விதத்தில் பயிற்சிக்கு உட்படுத்தப் படுவார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ள போதிலும் துணைவரால் துன்புறுத்தப்படக்கூடிய புதிய துணைவர் ஒருவர் பிரிந்து செல்ல முடியாத நிலையில் துன்புறுத்தலை எதிர் நோக்கக் கூடும் என்ற அச்சமும் உள்ளதாக அகதிகளுக்கான கனடிய அமைப்பு ஐயம் வெளியிட்டுள்ளது.

இது போலவே ஏற்கனவே துணைவர் பொறுப்பேற்றலை பயன்படுத்தி துணைவரை கனடாவிற்குள் அழைத்து வந்த ஒருவர் மீண்டும் திருமண நோக்கில் இன்னொரு துணைவரை பொறுப்பேற்க ஐந்து வருடங்கள் தாமதிக்க வேண்டும் எனவும் புதிய நடைமுறை வழிவகுக்கின்றது.

இவ்வாறான நடைமுறை மாற்றங்கள் மூலம் குடிவரவு சம்பந்தப்பட்ட முறை கேடுகளை தடுக்க கனடா குடிவரவு திணைக்களம் முயன்று வருகின்ற போதிலும் இச்சட்ட மாற்றத்தின் மூலம் திட்டமிட்ட முறைகேடுகள் தவிர்கப்படுவதட்கு வழி கிட்டாது என்கின்ற அச்ச உணர்வுகளும் வெளியிடப்பட்டு உள்ளது.

## விஜே தமிழன்...

எது வீடியோ என்று வித்தியாசம் தெரியாமல் போனது.

பின்னால், வாடகைப் பணமும் மலிந்து, வீடியோவை வீட்டில் வாடகைக்கு வைத்துப் பார்க்கும் வசதியும் வந்தது. வெளிநாட்டில் இருந்து வந்த ஓமான் சீமான்கள் மறக்காமல் இப்போது வீடியோவையும் கொண்டு வந்தார்கள். லைபிரரிப் பக்கம் தலை வைத்துப் படுக்காத தமிழன் றெக்கோடிங் பார் வீடியோ லைபிரரியில் சந்தாதாரர் ஆனான்.

வீடுகளில் பெண்டிர் சோகப் படம் பார்த்து, கண்ணைக் கசக்கினார்கள். தணியாத தாகம் நாடகத்தைக் கேட்டு ஒப்பாரி வைத்த மறத்தமிழ்ப் பெண்டிர் அன்றோ!

ஆங்காங்கே நீலப்படங்களும் தலை காட்டின. தமிழன் கண்ணில் ஏதோ மின்னல் அடித்து, காமன் வீட்டு ஜன்னல் திறந்ததால்... ‘காணாததைக் கண்டு உடம்பு நூலாச்சு’. இவ்வாறாக, கியூறியஸின் மாணவர்கள் அருகில் ஒரு வீட்டில் திரையிட்ட நீலப் படத்திற்கு, அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க, கியூறியஸூம் பிரதம விருந்தினராய் வருகை தந்து, கௌரவித்தான். ஆசிரியரும் மாணவர்களும் பாடத்திற்கு கட் பண்ணி நீலப் படம் பார்த்த சாதனை அதுவாகத் தான் இருக்க வேண்டும். கியூறியஸின் நேர்முக வர்ணனை கேட்ட மாணாக்கர்கள் குடல் அறுந்தார்கள்.

இவ்வாறாக இந்த விஜே தமிழன்கள் மலிந்து, தொலைக்காட்சி சேவை கூட நடத்தத் தொடங்கினார்கள். வீடியோவில் இருந்து டி.விக்கு போகும் இணைப்பை அன்டெனாவுக்கு பொருத்தி குறுந்தூர தொலைக்காட்சி சேவை நடந்தது. திரைப்படங்கள் மட்டுமன்றி, டியூசன் வகுப்புகளும் தொலைக்காட்சிச் சேவைகளுக்கு ஊடாக வந்தன...

ஊரே இளைத்து உடம்பு நூலாக, நள்ளிரவின் பின்னால், யாரோ விஜே தமிழன்கள் நீலத் திரைப்படங்களும் காட்சிக்கு விட்டு காமன் வீட்டு ஜன்னலை என்ன, கதவை முழுமையாய் திறந்தே விட்டார்கள்.

யாருக்குத் தெரியும், முறங் கொண்டு புலி விரட்டிய மறத் தமிழ்ப் பெண்டிர், விளக்குமாறு கொண்டு கணவன்மாரைத் துரத்தியதற்கு, இந்த நீலப்படங்களில் புறநானூற்றுத் தலைவன்கள் காமசாஸ்திரம் கற்றுக் கொண்டதும் காரணமாக இருக்குமோ என்னவோ? ■


**வகைபடு**

**சிறு விளம்பரங்கள்**

நீங்கள் வீடு வாடகைக்கு கொடுக்கிறீர்களா? கணனி விற்பனைக்கு உள்ளதா? வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டா? கார் விற்பனைக்கு உண்டா? வருமான வரி சேவைகள் வழங்குகிறீர்களா?

விற்பனைக்கு உள்ள பொருட்கள், வழங்கும் சேவைகள் எதுவாயினும், பூபாளம் பத்திரிகையிலும் இணையத் தளத்திலும் விளம்பரம் செய்யுங்கள். ஒரே கட்டணத்தில் பத்திரிகையிலும், இணையத்திலும் விளம்பரம் செய்யலாம்.

**416 284 4004**

**www.boobalam.com**
**boobalam@ymail.com**

**Looking for a French Teacher?**
In Mississauga -
All level of French
Call Theepa: 647-924-5657

**Affordable Personal, Corporate Tax, and Bookkeeping Services**
Call Kenga : 647-400-3973

**Basement For Rent**

இரண்டு படுக்கையறைகள், சமையலறையுடன் கூடிய நிலக்கீழ் வீடு வாடகைக்கு உண்டு. புதிதாகப் புனரமைக்கப்பட்ட இந்த வீடு மூன்று ஆரம்ப பாடசாலைகளுக்கு அருகில் உள்ளது. பஸ் தரிப்பிடத்தில் இருந்து இரண்டு நிமிட தூரத்தில் உண்டு. நவம்பர் 1ம் திகதி கிடைக்கும்.

**647-273-7340 (Siva)**

**உங்கள் முக்கிய ஆவணங்ளையும் படங்களையும் மிகவும் மலிவு விலையில் லமினேட் செய்து கொள்ள...**

**Palm Print**
1345 Morningside Ave #8

Photocopies From 4 cents

**Private Tuition Classes**
Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12
Siva
416 271 8467
416 265 9138

**FOR RENT**
Neilson and Sheppard (Near Malvern Mall)
Comfortable Location.
Beautiful 3 Rooms Townhouse for immediate rental.
**Call : 647 969 0175**

# விஜே தமிழன்

## பேராறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

பயாஸ்கோப்புக் காரன் பற்றி குமுதம், விகடனில் வாசித்தறிந்தது அல்லால் கியூறியஸ் வேறெங்கிலும் கண்டிலான். ஊரூராகச் சென்று திருவிழாக்களில் பணம் அறவிட்டுப் பெட்டிக்குள் சினிமாக் காட்டிய இவர்கள் பற்றிய விபரம் அம்புட்டுத் தான். இந்தப் படங்களுக்கு ஒலி இருக்குமா என்பதெல்லாம் தெரியாது. ஏதோ பெட்டிக்குள் படச் சுருளை வைத்து, கையால் சுற்றி, ஏதோ ஒரு ஒளி மூலத்தின் மூலம் உருப்பெருக்கி படம் காட்டி பணம் சம்பாதித்திருக்க வேண்டும்.

நம்ம ஊர் வைரவர் கடா வெட்டின் போதும், ஒருவர் ஒரு பெட்டியைக் கொண்டு வந்து கியூறியஸ்க்கு றீல் காட்டியது ஞாபகம். வெறும் படச் சுருளில் வெட்டிய துண்டு பிரேம்களை மாற்றி மாற்றி மாற்றிப் போட்டுக் காட்ட, ஏதோ பொட்டுக்குள்ளால் பக்கத்து வீட்டில் விடுப்புப் பார்த்தது போல, ஐந்து சதமோ ஏதோ கொடுத்து பார்த்த ஞாபகம்.

பார்த்த பின்னால் தான் பற்றிக் கொண்டுவந்தது. அந்தபயாஸ்கோப்புக் காரனை விட, அப்பனான திரைப்படக் கலக்ஷன் கியூறியஸிடம் இருந்தது. வைரவர் கடா வெட்டின் போது வாங்கியதும், கஸ்தூரியார் வீதியில் ஒரு தேநீர்க் கடையில் தொங்கிய திரைப்படச் சுருள் துண்டுகளில் வாங்கியதும் என கியூறியஸிடம் பெரிய தொகுப்பே இருந்தது. தியேட்டர்களில் றீல்ஸ் அறுந்து பொருத்தும்போது, எஞ்சியவை 25 சதத்திற்கு விற்பனையாகின, சலவைத் தொழிலோர் குளத்திற்கு அருகில் இருந்த கடையில். (சரியான பெயரை எழுதப் போனால், சண்டைக்கு வர ஒரு கூட்டம் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் காத்துக் கொண்டு இருக்கிறது!)

இப்போது தான் பெரிதாக ஏதோ சூரிய ஒளியில் சக்தியைக் கண்டுபிடித்த மாதிரிப் பீற்றிக் கொள்கிறார்கள். ஐந்தாம் வகுப்புக் கியூறியஸும் நண்பர்களும் உக்கிப் போய் மழை ஒழுகும் ஓலை வீட்டுக் கூரைக்குள்ளால் விழுந்த சூரிய ஒளியை கண்ணாடி கொண்டு தெறிப்பித்து, பூதக் கண்ணாடி




கொண்டு உருப்பெருக்கி, படம் காட்டியவர்கள். இதில் படம் ஓடும்போது, வாயால் இசையமைத்த இளசுகள், சண்டைக் காட்சிகளின் போது டிஷ்யூம் போட்ட சவுண்ட் என்ஜினியர்கள் எல்லாம் அப்போது கியூறியஸின் திரைப்பட யுனிட்டில் இருந்தார்கள்.

இதைத் தான் சொல்வார்கள்... Be careful what you wish for, it might come true என்று. அந்தக் காலத்தில் உலகத்தில் இல்லாத அளவுக்கு இவ்வாறான தொகுப்பு ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பது கியூறியஸின் கனவு. கடைசியில் கியூறியஸ் கால் நூற்றாண்டாக வேலை பார்த்தது, வருடம் இரண்டு பில்லியன் அடி நீளமான திரைப்படச் சுருள்களை உற்பத்தி செய்த நிறுவனம். அப்போது, கியூறியஸ்க்கு அந்த ஆசை எல்லாம் போய் விட்டது. முழு நீள பதினாலாயிரம் அடி திரைப்படம் ஒரு ஐந்தரை அங்குலத் தட்டில் வந்த பின்னால், இந்தச் சுருள் எல்லாம் எதற்கு? ஆனால், அஞ்சலினா ஜொலியின் வியட்னாம் படம் ஒன்றில், பனங்கூடல் காட்சி ஒன்று வந்தது கண்டு, அந்தத் துண்டு மட்டும் கபளீகரம் பண்ணப்பட்டு, கியூறியஸிடம் உண்டு. (ஐயா, பனை பனங்கொட்டையார் ஊரில் மட்டுமில்லை, வியட்னாமிலும் இருக்கிறது)

இந்த பயாஸ்கோப்புகளின் றீல் விடுதல்களுக்கு இடையில், பதினாறு மில்லி மீட்டர் புரஜெக்டர்கள் வந்தன. பேசும் படத்திலும் தினகரனிலும் வந்த பதினாறு மில்லி மீட்டர் திரைப்படப் புரஜக்டர் விளம்பரங்களை நம்பி, கொழும்புக்கு வெங்காயம் விற்கப் போன தந்தையிடம், கொட்டாஞ்சேனையில் அஜந்தா ஏஜன்சீஸ் கடையில் வாங்கி வரச் சொன்ன போது, அங்கே அவர்கள் அப்படி ஒரு கடை இல்லை என்று விட்டார்கள். பின்னால் பதின்மூன்று ரூபாய் பணத்தை அனுப்பினால், மிகச் சிறிய பலகைப் பெட்டிக்குள் ஒரு மின்குமிழை வைத்து, அதன் முன்னால் பொலிதீன் சுருளில் சில படங்களைக் கீறி இரண்டு தடிகளில் பொருத்தி கையால் சுழற்றி படம் பார்ப்பது தானாம் புரொஜெக்டர் என்று கியூறியஸைச் சுத்தினார்கள். இவ்வாறாகத் தானே ஒரு திரைப்பட (சுருள்) இயக்குனர் ஆகும் எட்டாம் வகுப்புக் கியூறியஸின் திட்டத்தில் மண் விழுந்தது. எட்டாம் வகுப்போடு மேற்படிப்பை முடித்த பெரியோர் போல, அந்த ஐடியாவை விட்டு, சில நேரம் போராட்டத்தில் இறங்கியிருந்தால், சீன் மாறி, கிளைமாக்ஸ் முள்ளிவாய்க்காலில் இல்லாமல் வேறெங்காவது முடிந்திருக்கக் கூடும். பாவம் 'நாம் ஈழத்தமிழர்', அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். இப்படியாக இளசுக்கு எதிராகக் கொடி தூக்கும் கண்ராவி எல்லாம் ஏற்பட்டிருக்காது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் திரைப்படப் பிரிவினரும், சோவியத் தோழர்கள் உட்பட்ட வெளிநாட்டு தூதுவரகங்களும் அடிக்கடி பாடசாலைகளில் பதினாறு மில்லி மீட்டர் செய்திப் படங்களைத் திரையிட்டார்கள். சில நேரங்களில் கோவில் தேர்முட்டிச் சுவர்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக திரையிட்டார்கள். இவ்வாறாக சோவியத் விண்வெளி முயற்சியும் பயிற்சியும் பற்றிய கறுப்பு வெள்ளைப் படம் ஒன்றை கற்பகப் பிள்ளையார் உபயத்தில், அவரது தேர்முட்டியில் பார்த்து ரசித்தது ஞாபகம். இவையெல்லாம் அந்தக் காலத்தில் பிரமிப்பை ஏற்படுத்திய விடயங்கள்.

பிரமாண்டமான திரையரங்குகளில் பாரிய இயந்திரங்களுடன் பார்த்த மக்களுக்கு, கீழிறங்கி வந்து, மக்களோடு மக்களாக பொழுதுபோக்கையும், தகவல்களையும் வழங்க சினிமா ஊடகம் பயன்படுத்தப்பட்டது. பிரசார நோக்கத்திலும் இருந்தாலும், இலவசமாய் இருந்ததால், ஓசியில் கிடைத்தால் நஞ்சையும் கடிக்கும் தமிழனுக்கு இவை வரப்பிரசாதமாய் தான் இருந்தன.

சலனத்திரைப்படங்கள் மட்டும் இல்லாமல், வெறும் ஸ்லைட் புரொஜக்டர்களை வைத்தே எங்களை பிரமிப்பில் ஆழ்த்தியவர்களும் உள்ளார்கள். இதில் நம்ம ஊர் கத்தோலிக்க குருவானவர்களும் அடக்கம். தமிழகத்தில் சாந்தோம் கலைத்தொடர்பு நிலையம் தயாரித்த ஸ்லைட் தொகுதிகளை வெள்ளி தோறும் போட்டு, பக்தர்களைக் கோவிலுக்கு வரவழைத்த வலிமை மிகு தொடர்பு சாதனம் அது. படங்கள் நன்றாகத் தான் இருந்தன. குருவானவர்களின் பிரசங்கம் தான் கொஞ்சம் ரூ மச்!

இருந்தாலும், தமிழக சினிமாவோடு இவை போட்டி போட முயற்சிக்கவேயில்லை. சினிமாவைப் பார்ப்பதாயின், பட 'மாளிகை'களுக்கு சென்றேயாக வேண்டியது கட்டாயம். ஆனால், டிஜே தமிழன்களின் உபயத்தில், ஊர் ஊராய் நாடக மன்றங்கள் முளைத்ததால், பொழுதுபோக்குக்கு நாடகங்கள் பெருமளவில் இருந்தன. பயாஸ்கோப்பு றீல்கள் மாதிரி இல்லாமல், சமூக சீர்திருத்த, வரலாற்று, நகைச்சுவை நாடகங்கள் என வரலாறு படைத்த பல நாடகங்களும் கலைஞர்களும் இருந்தார்கள். நாங்கள் எதிர்பார்க்கும் கலைத்துவம் இல்லாவிட்டாலும், தங்கள் திறமைக்கும் வசதிக்கும் ஏற்ப படைத்து, ஒரு கலை வடிவத்தையே உருவாக்கினார்கள்.

இவர்கள் பிழைப்பில் மண் போட வந்தன... டிவியும் வீடியோவும்!

றெக்கோடிங் பார்கள் களத்தில் குதித்தன. கண்ணாடிச் சுவர்களின் பின்னால் 12 அங்குல கறுப்பு வெள்ளைத் திரையில் ஓடிய பிம்பங்களைப் பார்க்க, மாலை நேரங்களில் நகரின் தெருவோரங்களில் கும்பல் பிரமிப்போடு வாய் பார்த்தது. சவர்க்காரப் பெட்டியில் பாட்டுக் கேட்ட தமிழன், இப்போது சிறிய முகம் பார்க்கும் கண்ணாடி சைஸ் திரையில் மெய் மறந்தான்.

வீட்டுக்குள் டி.வி மெதுவாக ஆக்கிரமிக்கத் தொடங்கியது. பட 'மாளிகை'க்குள் இருந்து சினிமா, வெளிநாட்டுப் பணத்தில் எழுந்த தமிழனின் மாளிகைகளுக்கு எழுந்தருளத் தொடங்கியது. செட்டியார் தெரு நகைக்கடைகளின் உபயத்தில் வெள்ளி தோறும் தமிழ்த் திரைப்படங்கள் அருள் பாலிக்கத் தொடங்கின. ரூபவாகினி சுமந்து வந்த சிங்களத் தொடர்களுக்கு மவுசு வரத் தொடங்கியது. தமிழன் இனவேறுபாடு மறந்தான்.

ஊரில் வீடுகளில் டி.வி வைத்திருந்தவர்கள் வீட்டில் வெள்ளி தோறும் ஊரே திரண்டு அழையா விருந்தினர் ஆனார்கள். தமிழன் இங்கிதமும் பண்பாடும் மறந்தான். இவ்வாறாகக் கியூறியஸ் வீட்டிலும் வெள்ளி திருவிழாக் கோலம் கண்டது. வந்தவர்களுக்கு, கியூறியஸின் சகோதரிகள் தேநீர் வேறு கொடுத்து உபசரித்தார்கள். மக்கள் வெள்ளத்தில் சொந்த வீட்டிலேயே கியூறியஸ் அகதியானான்... படம் பார்க்க முடியாமல்!

மறுபுறத்தில் வீடியோ வந்திறங்கியது, முப்பதாயிரம் ரூபா விலையில். வழமை போல, பதினாலாயிரம் அடி சினிமா, ஒரு கசட்டுக்குள் சுருண்டது. மாளிகைகளுக்குள் குடியிருந்த சினிமா தெருவுக்கு இறங்கியது.

அண்ணன் ஒரு கோவில், சங்கே முழங்கு என எம்.ஜி.ஆர், சிவாஜி படங்கள் முதல் ஒவ்வொன்றாக கசட்டுக்கள் வரத் தொடங்கின. றெக்கோடிங் பார்களுக்கு புதிதாய் வியாபாரம் முளைத்தது. ஊரில் சவுண்ட் சேர்விஸ் வைத்திருந்தவர்கள் புதிய உபாயம் கண்டார்கள். றெக்கோடிங் பார்களில் வீடியோ கருவியும் கசட்டுகளும் வாடகைக்கு எடுக்கலாம். சவுண்ட் சேர்விஸ்காரர்கள் பயாஸ்கோப் காரர்கள் ஆனார்கள்.

வீடியோ ஜொக்கிகள் ஹீரோக்கள் ஆனார்கள்... றெக்கோடிங் பார் என்ஜினியர்கள் போல.
புதிய படங்களுடன் பந்தா காட்டினார்கள். 26 அங்குல சொனி டிவியை வைத்து ஊரைச் சுத்தினார்கள். தியேட்டர்களில் வகுப்பு வேறுபாடு காட்டிய தமிழன் சாதி வேறுபாடு மறந்து சமரசம் கண்டான். ஒரே நுழைவுக் கட்டணம், வேறுபாடின்றி.

ஊரில் சினிமா திரையீட்டாளர்கள் தோன்றி, வாடகைக்கு வாங்கி வந்து படம் காட்டி, பணம் சேர்த்தார்கள். தெருவில் போன மின்சாரத்தை வயர் எறிந்து இறக்கி, இலவச மின்சாரத்தில் சினிமா காட்டல் நடந்தது. போட்டிக் குழுவினர் பொறாமையால் சைக்கிள் செயின் எறிந்து சபையைக் குழப்பி, திட்டு வாங்கினர்.

ஊரே கூடி வந்து குந்தியிருந்து பனிக் குளிர் தாங்கி படம் பார்த்தது. இடையில் படம் நிற்கும் போதெல்லாம், விசயம் தெரிந்த பெரியவர்கள், றீல்ஸ் அறுந்து போச்சு என்று, கியூறியஸ் போன்ற சிறார்களுக்கு தொழில்நுட்ப விளக்கம் அளித்தார்கள்.

ஊர் ஊராக சினிமா வளர்ந்தது. அதே வேகத்தில் நாடகம் நலிந்தது. காரில் வந்திறங்கிய வீடியோவும் டிவியும் பின்னால், போட்டியால் மலிந்து, மோட்டார் சைக்கிளில் வந்திறங்கின. ஊரில் கசிப்பு வியாபாரம் செய்தவர்களும் அதே அளவு பீப்பாய்களில் மோட்டார் சைக்கிளில் கடத்தல் வியாபாரம் செய்ததால், கியூறியஸ் போன்றோருக்கு எது கசிப்பு,

14ம் பக்கம்...

## வாழ்வின் துண்டங்கள்...

மேலெழுந்து வந்தன. சாதிக் தலையை அசைத்து, பெருமூச்சு விட்டார். வண்டி தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. விசுவமடுவைக் கடந்து தேராவில் பகுதியை அண்மித்தோம். தேராவிலில்தான் முன்னர் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் இருந்தது. இப்ப அது பெரிய மண் மேடு. துயிலுமில்லம் இடித்து, அடையாளம் தெரியாமலாக்கப் பட்டதற்குப் பிறகு, அங்கே வீதி திருத்தத்திற்கான மண்ணைப் பெரிய மலைபோலக் குவித்து வைத்திருக்கிறார்கள். நெஞ்சுக்கு மேலே பெரிய மலையை வைத்திருப்பதைப்போல. அந்த இடத்தைக் காட்டி நிலைமையை விளக்கினேன். ஓரங்களில் எருக்கலஞ் செடிகள் முளைத்திருந்தன. கோடைப்புழுதி எங்கும் படர்ந்திருந்தது. தேராவில் குளத்தை வளைத்துச் செல்லும் பாதையில் புலிகளால் நடுகை செய்யப்பட்ட தேக்க மரக்காட்டில் ஒரு பெரிய படைத்தளத்தை நிர்மாணித்து வைத்திருக்கின்றன் படையினர். சாதிக் அதைப் பற்றிக் கேட்டார். ‘இராணுவ பலத்தையே அதிகமான நம்புகிறது இலங்கை அரசு’ என்றேன். ‘எப்போதும் அது சாத்தியமாகுமா?’ என்று கேட்டார் சாம். ‘அவரவருக்கு அவரரின் அனுபவங்களே முக்கியமாகப்படும். இலங்கை அரசைப் பொறுத்தவரையில் தன்னை நோக்கி வந்த அபாயங்களையெல்லாம் அது இராணுவத்தைக் கொண்டே, ஆயுதத்தைக் கொண்டே அடக்கியிருக்கிறது. இவற்றைப் பயன்படுத்தியே தன்னைப் பாதுகாத்து வெற்றியீட்டியிருக்கிறது. ஆகவே படைபலத்தைப் பெருக்கி வைத்திருப்பதன் மூலமாக தன்னைப்பாதுகாத்துக் கொள்ளலாம் என்று அது நினைக்கிறது’ என்று விளக்கினேன். சாம் சிரித்தார். சாதிக் இலங்கையின் அரசியலை எந்தளவில் புரிந்து வைத்திருக்கிறார், எப்படி அறிந்திருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால், அவர் எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடிருந்தார். ‘அது எப்படி படைகளால் பாதுகாக்கப்பட்டிருக்கு? எப்பவும் இலங்கை அரசுக்குப் பிரச்சினையாகத்தானே இருக்கு? என்று கேட்டார் அவர். ‘உண்மைதான். இலங்கை அரசுக்கு எப்பவுமே பிரச்சினைதான். சுதந்திர இலங்கையில் உரிமைப் பிரச்சினையை தமிழர்கள் கிளப்பியிருந்தாலும், அதற்கான போராட்டங்களைத் தமிழர்கள் நடத்தியிருந்தாலும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் ஆரம்பகர்த்தா சிங்களத்தரப்பிலிருந்த ஜே.வி.பி என்ற இடதுசாரி இளைஞர் இயக்கமே. இந்த இயக்கத்தின் போராட்டத்தையும் நடவடிக்கைகளையும் 1971 ல் ஆட்சியிலிருந்த சுதந்திரக்கட்சி மிக மோசமாக ஒடுக்கியது. இதற்காக அது அப்போது இந்திய உதவியையும் நாடியிருந்தது. அரசுக்கு அரசு என்ற வகையில் இந்தியாவும் உதவியது. இலங்கையின் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி நெருக்கமாகிய சந்தர்ப்பம் இதனால் ஏற்பட்டது. ஏனென்றால், சிறிமாவோ அந்த நாட்களில் சீனாவுடன் நெருக்கமாக இருந்தார். அதைக் குறைத்து இந்தியாவுடன் நெருக்கமாகிக் கொள்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை இந்தியாவும் இந்திரா காந்தியும் பயன்படுத்திக்கொண்டது வரலாறு. இரண்டாவது தடவையாக 1987 இல் மீண்டும் ஜே.வி.பி எழுச்சியடைந்த போதும் இலங்கை அரசு அதை ஆயுதத்தின் மூலமாகவே ஒடுக்கியது. இந்த இரண்டு தடவைகளிலும் ஏறக்குறைய ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களும் பொதுமக்களும் பலியானர்கள். ஆனால், ஜே.வி. முன்னிறுத்திய சிங்கள அடி நிலை மக்களின் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. அவை அப்படியே கொதிநிலையிற்தான் உள்ளன. பிறகு, தமிழ் இயக்கங்களின் எழுச்சி. அதையும் இந்தியாவே பயன்படுத்திக் கொண்டது. ஆனாலும் தமிழர்களின் அரசியற் பிரச்சினையையும் ஆயுதமுனையில் தீர்த்துக் கொள்ளவே இலங்கை விரும்பியது. அரசியற் பேச்சுவார்த்தைகளை நடத்தினாலும் அது ஆயுதத்தீர்விலேயே அதிக நாட்டமாக இருந்தது. முப்பதாண்டு காலத்திலும் போரை நடத்தியதில் இருந்த அக்கறையும் போருக்காகச் செலவழிக்கப்பட்ட உழைப்பும் எடுத்துக் கொண்ட முயற்சியும் வளங்களும் சமானதானத்துக்குச் செய்யப்படவில்லை. இறுதியில் பெரும்போர் நடந்து முடிந்திருக்கிறது. புலிகள் தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால், பிரச்சினைகள் அத்தனையும் கொதிநிலையிலேயே உள்ளன. போதாக்குறைக்கு மேலும் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. ஆனால், இலங்கை அரசு இந்த இரண்டு எழுச்சிகளையும் ஆயுத ரீதியிலியே ஒடுக்கியதில் ருசி கண்டுள்ளது. அதனால், அது படைபலத்தைப் பெருக்கி, இராணுவரீதியாகவே தன்னைப் பாதுகாக்க விரும்புகிறது. இந்த உளவியலை மாற்றுவது ரொம்பக்கடினம். இது ஒரு பெரும் சவால்’ என்றேன். ‘வரலாற்று ஓட்டத்துக்கு மாறாக, விசித்திரமாக இருக்கிறதே!’ என்றார் சாதிக். ‘உண்மையே. இப்படி வரலாற்றில் வேறு சம்பவங்கள் உண்டு. முதலாம் போருடன் ஜேர்மனியின், போர் நாடுகளின் பசி அடங்கியதா? பல நாடுகள் நீண்டகாலப் போரை, இராணுவ நடவடிக்கைகளை நடத்துகின்றன. இதற்கெல்லாம் செலவழிக்கும் உழைப்பையும் பணத்தையும் மனித உயிர்களையும் இயற்கை வளத்தையும் சமாதானத்துக்குச் செலவிட்டால், தீர்வுகள் கிடைக்கும். சனங்களும் பாதுகாக்கப்படுவர். அவர்களுடைய வாழ்க்கையும் மேம்பாடடையும். வளங்களும் பாதுகாப்பாக இருக்கும். ஆனால், இதை யார்தான் ஏற்றுக்கொள்கிறார்கள்? அதிகாரம் எப்போதும் இறங்கிச் செல்ல விரும்புவதில்லை. பிறர் அந்த உயரத்துக்கு ஏறுவதையும் விரும்புவதில்லை. ஆகவே அவர்கள் இப்படித்தான் சிந்திப்பார்கள். இங்கே பாதிப்பு பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற சனங்களுக்குத்தான்’ என்றேன். ‘இதே மாதிரித்தான் நம்ம நாட்டிலும் சிந்திக்கிறார்கள்’ என்றார் சாதிக். வண்டி ஓடிக்கொண்டேயிருந்தது போர் உக்கிரமாக நடந்த இடங்களை நோக்கி. சனங்கள் பரிதவித்து அலைந்த இடங்களில் அது நுழைந்தது

(தொடரும்)

## பரம் ஜி...

பான்மை வெள்ளையினத்தவர்களின் ஊது குழல்களாக விளங்கும் குடியரசு கட்சியின் கொள்கையுமாகும். மேற் சொன்ன காரணங்களுக்கு எதிராக செயற்படும் பராக் ஒபாமா இவ்வர்க்கத்தின் எதிரியானார். கடந்த நான்கு வருட காலங்களுக்குள் இவர்கள் எதிர்பார்த்தது போன்ற முன்னேற்றங்களை விரைவாக பெற்று அமெரிக்காவின் பொருளாதார வளாச்சியை மந்திரத்தால் மாங்காய்கள் விழுத்துவது போன்று ஒபாமாவினால் கொண்டுவர முடியவில்லை. அல்குவைதா தலைவன் பின்லாடன் கொலை செய்யப்பட்டும், மத்திய கிழக்கு நாடுகள் முதலாக மற்றய நாடுகள் வரையில் ஒபாமா அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சின்னமாகவே பார்க்கப்பட்டு இவர்கள் எதிர்பார்த்த நற்பெயரையும் அமெரிக்காவிற்கு புதிதாக உருவாக்கஅவரால் முடியவில்லை.

முடிவு ‘கருப்பனுக்கு’ தொடர்ந்து இரண்டாவது பதவிக்காலத்தை கொடுத்து பெருமைப்படுத்தக்கூடாது என்பதுதான்.

டொனால்டு ட்றம்ப் போன்ற கீழ்த்தர மனித வர்க்க செயல்பாடுகளை கொண்டிருக்கும் இனத்துவேசிகளை கொண்டு நாகரிக இனத்துவேச வழிகளில் ஒபாமாவின் பிறப்பை மீண்டும் அவமதித்து, வெள்ளை இனத்தவர்கள் மத்தியில் அவர் வாக்குகள் சேகரிக்க முடியாத வகையில் வெறுப்பினை பெருக்கி விடும் முயற்சிகள் குடியரசு கட்சி சார்பில் ஒரு புறம் வேகமாக நடந்து கொண்டிருக்கையில் அவற்றை விடவும் மிக வேகமாக வீசிய சூறாவளிப் புயற்காற்று அமெரிக்காவின் பல மாநிலங்களில் பாரிய பாதிப்புகளையும் அழிவுகளையும் உண்டாக்கி வருகின்ற செவ்வாயில் நடைபெற இருக்கும் தேர்தல் பற்றிய செய்திகளை இருட்டடிப்பு செய்து விட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அமெரிக்காவின் எதிர்காலத்தில் எந்தவித மாற்றங்களையும் கொண்டுவரப்போவதில்லை என்பதுதான் உண்மை. காரணம் இன்று உலக பொருளாதாரத்தை தன் விரல் நுனிகளில் வைத்திருக்கும் சீனாவிடம் கடனாளியாக இருக்கும் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார கட்டமைப்பு இன்றய நிலைகளில் இருந்து மீளப் போவதில்லை என்பதையே உறுதி செய்கின்றது.

2016ல் வரவிருக்கும் ஐக்கிய அமெரிக்காவின் அதிபர் தேர்தலே நாம் ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டிய ஒன்று. காரணம் அமெரிக்க முதல் பெண் அதிபராக முற்றிலும் தகுதி வாய்ந்த ஹிலாரி கிளின்டன் பதவி ஏற்கும் புதிய அத்தியாயத்தை அத்தேர்தல் ஆரம்பித்து வைக்கலாம்.

பார்வைகள் தொடரும்.....

## பெண்கள்...

பகுதியில்லையா? அரசியல்வாதிகளின் வாழ்வும், போர் மூர்க்கர்களின் வெற்றியும், அவர்கள் திறப்பு நாடாக்கள் வெட்டுவதும்தான் வரலாறா? இங்கு அவைதான் ஆவணக்காப்புக்குள் அடங்குகின்றன. ஆவணக்காப்பு தொடர்பான முடிவு எடுத்தல், தெரிவு செய்தல், காப்பு செய்தல் போன்றன தொடர்பான முடிவுகள் எடுக்கும் அதிகாரம் யார் கைகளிலுள்ளது? அதிகாரமுள்ளோர் கைகளில் உள்ளாதால் அவர்களது ஆவணங்களே காப்பகங்களிலுமுள்ளன. இங்கு ஆவணக்காப்பு தொடர்பான எந்தச் சட்டமோ, கொள்கையோ கிடையாது.

2)என்னைப் பொறுத்தவரை காலனித்துவ காலத்திற்கு பின்னரான இலங்கையில் எமது சமூகத்தின் அரசியல் வரலாறு மிக முக்கியமானவை. சுதந்திரத்தின் பின்னும் சுதந்திரம் கிடைக்காத பல்வேறு இனக்குழுக்கள் இங்குள்ளன. இவை இந்த அறுபது வருடகால வரலாற்று காப்பகங்களில் இல்லை. கொல்பவர்களின் வெற்றிக்களிப்பை ஆவணமாக்குவதைவிட கொல்லப் படுகின்றவர்களின் வாழ்க்கைக்கு என்ன நடந்தது என்பதை ஆவணமாக்குவது எனக்கு முக்கியமானதாகும். குறிப்பாக இந்த 60-70 ஆண்டு காலப்பகுதியில் சமூக அரசியல் இனத்துவ முரண்பாடுகள், வன்முறைகள், போர் அனர்த்தங்கள், மக்களின் இயல்பு வாழ்வுக்கு என்ன நடந்தது என்பதனை பதிவுசெய்வது முக்கியமானதாகும். இதில் தான் குரல்களற்ற சமூகக்குழுக்களின், பெண்களின், குழந்தைகளின் வாழ்க்கையை என்னால் பதிவு செய்யமுடிகின்றது.

3)உண்மையில் “போர்-வெற்றி-நிலஆக்கிரமிப்பு” என்ற வரலாற்று, ஆவணகாப்புச்சட்டதிற்கு அப்பால் வரலாற்றை அதன் ஆவணப் படுத்துதலை பார்க்கவே நான் விரும்புகிறேன். இனக்குழுமம், மொழிக்குழுமம் சார் பல்வேறு சமூக-கலாச்சார-பொருளாதார-அரசியல் நிலைப்பாடுகளை கொண்ட அடிப்படைச் சமூகத்தின் வாழ்வியலையும், அதன் செழுமை, துயரம், அழிவு உட்பட ஆவணப்படுத்துவது தான் எனது இலக்காக உள்ளது. இந்தவகையில் கடந்த 25 வருடங்களாக நான் நேரில் பார்த்த கண் கண்ட சாட்சியாக அனுபவித்து அறிந்த சாட்சியாக இவற்றை பதிவு செய்கின்றேன்.

4)உண்மையில் ஒவ்வொரு சமூகத்திலும் தனிப்பட்டவர்கள் வெளியே பேச முடியாதவாறு காத்து வைதுள்ளவைகள் வெளியே கொண்டுவரல் வேண்டும். இல்லாவிடில், எதிர் காலத்தில் ஆவணத்தை பார்ப்பவர்கள், இக்குறிப்பிட்ட காலப்பகுதியில் “குரல்கள் அற்ற மக்கள்” வாழ்ந்ததற்கான தடயங்கள் இல்லாது போய்விடும், அந்த இடைவெளியை ஒடுக்கிய சமூகம் எனக்களித்த “சலுகை” களைப் பயன்படுத்தி முன்வைக்கின்றேன், முயல்கின்றேன். அதனால் தான் எனது எதிர்கால செயற்திட்டமான “இலங்கையில் மாறுபடுகின்ற நிலஅமைப்புக்கள் Srilanka’s Changing Landscape” முன்னெடுத்து வருகின்றேன்.

## ஐ.நா...

பதவியில் தொடர்வது வருந்தத்தக்கது எனவும் அவர் பதவியில் தொடர்வது ஐ.நாவின் நம்பகத்தன்மையைக் கெடுப்பதாகவும் றைஸின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

பொதுச்சபையில் அனேக நாடுகள் றிச்சாட் ஃபோல்க்கின் அறிக்கையை நேர்மையானதெனவும் பக்கச் சார்பற்றதெனவும் வரவேற்றுள்ளன.

இதேநேரத்தில் 22 அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு அமைப்பு மேற்குக்கரையோரத்தில் இருக்கும் யூதக்குடியிருப்புக்களில் இருந்துவரும் பொருட்களைப் பகிஸ்கரிக்கும்படி ஐரோப்பிய ஒன்றியத்தைக் கேட்டுள்ளது.